
Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, OCTOBER 18, 2024

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 18, 2024 | ஒளி: 10 கதிர்: 074 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## அரிசிக்கு தட்டுப்பாடு



நாடு முழுவதிலும் அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை உயர்த்தியதினை தொடர்ந்து நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களும் விலைகளை உயர்த்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

### “யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காது

# தட்டிக்கழிக்காத அணியே வேண்டும்”

### ரணில் விசேட அறிக்கை

இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைச் செலுத்தத் தொடங்கும் 2027ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச வருமானத்தை 15% ஆக்கும் சவாலை புதிய அரசாங்கம் எதிர்கொள்ளும் என முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க வியாழக்கிழமை (17) தெரிவித்தார்.

இந்த இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு வருடமும் ஒரு சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று கூறிய ரணில் விக்ரமசிங்க, பொறுப்புகளில் இருந்து தட்டிக்கழிக்காத அனுபவம் வாய்ந்த அணிதான் அடுத்த பாராளுமன்றத்துக்கு தேவை என்றும் வலியுறுத்தினார்.

அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டை மீட்டெடுக்க தன்னுடன் இணைந்து செயற்பட்ட குழுவினர் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, நிதி பலம் கொண்ட பாராளுமன்றத்தை பலப்படுத்தும் வகையில், அந்த குழு வெற்றி பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைச் செலுத்தத் தொடங்கும் 2027ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச வருமானத்தை 15% ஆக்கும் சவாலை



புதிய அரசாங்கம் எதிர்கொள்ளும் என முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க வியாழக்கிழமை (17) தெரிவித்தார்.

இந்த இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு வருடமும் ஒரு சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று கூறிய ரணில் விக்ரமசிங்க, பொறுப்புகளில் இருந்து தட்டிக்கழிக்காத அனுபவம் வாய்ந்த அணிதான் அடுத்த பாராளுமன்றத்துக்கு தேவை என்றும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

### IMF வரிச் சூத்திரத்தை

## "தற்போதைய அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும்"



சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் மக்களின் சுமையைக் குறைக்கும் புதிய உடன்படிக்கைக்கு தற்போதைய அரசாங்கம் செல்ல வேண்டும். இவ்வாறான உடன்படிக்கையின் மூலம் மக்களின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமைகள் தளர்த்தப்பட்டு அதன் மூலம் வலுவான பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாகும். ஆனபடியால், தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, வரிச் சுமையை குறைக்கும் புதிய ஒப்பந்தத்திற்குச் செல்லும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறான வேலைத் திட்டங்களுக்குத் தாம் ஆதரவளிக்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “முடிந்தவரை திருடுங்கள்; பிடிபடாதீர்கள்”



“உங்களால் முடிந்தவரை திருடுங்கள், ஆனால் பிடிபடாதீர்கள்” என்று தனது அமைச்சரவையில் இருந்தவர்களிடம் கூறி வந்த ஒரு ஜனாதிபதி இங்கிருந்தார் இதனாலேயே எமது நாடு சீரழிந்தது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க இலங்கையில் நிலவும் ஊழல்கள் குறித்துப் பேசியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கணக்காளர்களின் 45ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## “கொடுத்ததால் கேட்கிறோம்"

பி.கேதீஸ்

எனது பாட்டனாரின் பெயரையோ எனது தந்தையின் பெயரையோ இங்குப் பயன்படுத்தவில்லை. நான் உங்களுக்குச் செய்த சேவையின் பொருட்டே நாங்கள் உங்களிடம் வருகின்றேன். நாங்கள் இந்த அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும்போது நாட்டில் பொற்காலம் கிடையாது. என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஈஸ்டர் தாக்குதல்; “அரசாங்கம் வெளியிடா விட்டால்நா ன் பகிரங்கப்படுத்துவேன்”

### 3 நாட்களுக்குள் வெளியிட வேண்டும் என்கிறார் விஜித

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை எதிர்வரும் ஏழு நாட்களுக்குள் அரசாங்கம் வெளியிடா விட்டால், திங்கட்கிழமை தாம், அதனைப் பகிரங்கப்படுத்தப் போவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மம்பில தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### இறக்குமதி செய்யப்படும்

## தேங்காய் எண்ணெயால் ஆபத்து



இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தரமற்ற தேங்காய் எண்ணெயால் பலருக்குப் புற்றுநோய் ஏற்படும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் சந்துன் ஹேமந்த தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆய்வுக் கூடங்களில் போதியளவு வசதிகள் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## எமது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது



எஸ்.கணேசன்

எமது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார். ஹட்டனில் நடைபெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் அதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## வலது கை விரலில் அடையாளம்

எதிர்வரும் 26ஆம் திகதி எல்பிட்டிய பிரதேசசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்கள் வாக்களித்ததை உறுதிப்படுத்துவதற்காக இடது கை சிறு விரலில் அடையாளப்படுத்தப்பட்டது.

எனினும், அந்தக் குறியீடு இன்னும் அந்த விரலில் உள்ளமையினால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ (3) ஆம் பிரிவின் பிரகாரம், 26ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின் போது வாக்காளரின் இடது கைப் பெருவிரலில் அடையாளமிடப்படும்.

தொடர்ச்சி P2



## மஹர சிறைச்சாலை மரணங்கள்;

### சி.ஐ.டிக்கு புதிய உத்தரவு

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற போராட்டத்தில் மரணமாக 11 கைதிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# தட்டிக்கழிக்காத அணியே வேண்டும்”

அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டை மீட்டெடுக்க தன்னுடன் இணைந்து செயற்பட்ட குழுவினர் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, நிதி பலம் கொண்ட பாராளுமன்றத்தை பலப்படுத்தும் வகையில், அந்த குழு வெற்றி பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை தெரிவித்தார்.

மேலும், எங்கள் கடனை செலுத்த முடியாமல் திவால் நிலையை அறிவித்தபோது நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றேன். அந்த நேரத்தில் எனது முதன்மை இலக்கு கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பது மற்றும் திவால் நிலையை அகற்றுவது என்றார்.

நாட்டை திவால் நிலையில் இருந்து மீட்பதற்காகக் கடந்த பாராளுமன்றத்துடன் இணைந்து செயற்பட்டேன். அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலைத் தன்மையை செயல்படுத்துவதற்கும் அதை அடைவதற்கும் எங்களிடம் பல இலக்குகள் உள்ளன.

முதலில் 2028ஆம் ஆண்டிலிருந்து கடனை அடைக்க வேண்டும். 2027-ம் ஆண்டுக்குள் நமது அரசின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக இருக்க வேண்டும். அந்த இலக்கை அடைய, ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவீத வளர்ச்சியை எட்ட வேண்டும். அடிப்படையில், இந்த ஆண்டு இறுதிக்குள், 2019ன் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மீண்டும் பெற முடியும். அதே சமயம் அந்நியச் செலாவணி கையிருப்பையும் அதிகரிக்க வேண்டும். அந்நியச் செலாவணி கையிருப்பு 10-14 பில்லியன் டொலர் என்ற வரம்பில் இருக்க வேண்டும்.

நாம் மேற்கூறிய இலக்குகளை அடைய விரைவான வளர்ச்சியை உருவாக்க வேண்டும். இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சம் ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் பலவற்றைச் செயல்படுத்துவதாகும். இந்த அனைத்து விடயங்களுக்கும் பாராளுமன்றமே பொறுப்பு. ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி, பாராளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது.

கடந்த பாராளுமன்றத்தில் இந்தப் பொறுப்புகளை ஏற்க எவரும் முன்வரவில்லை. நான் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை இணைத்து அரசாங்கத்தை அமைக்க உழைத்தேன்.

அடுத்த பாராளுமன்றத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்க அனுமதிக்கக் கூடாது. கடந்த இரண்டு வருடங்களாக என்னுடன் பணியாற்றியவர்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட அனுபவம் உள்ளவர்கள் எனவே அவர்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# அரிசிக்கு தட்டுப்பாடு

மேலும், நாட்டில் கீரி சம்பா தவிர்ந்த ஏனைய அரசி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை குறைப்பதாக கூறிய போதிலும் சந்தையில் ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 210 ரூபா முதல் 230 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களும் சிவப்பரிசி, நாடு மற்றும் சம்பா அரிசி வகைகளை பாரிய அரிசி வியாபாரிகள் விற்பனை செய்யும் விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

மின் கட்டணங்கள், டீசலின் விலை போன்றன குறைந்துள்ள நிலையிலும் அரிசி உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதாக கூறி அரிசி விலையை அதிகரித்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்னதாக ஒரு கிலோ கிராம் எடையுடைய கீரி சம்பா அரிசி 400 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

தற்பொழுது ஒரு கிலோ கிராம் கீரி சம்பா 250 முதல் 270 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கீரி சம்பா விலை உயர்வினால் அதிகளவு விவசாயிகள் கீரி சம்பாவை விளைவித்தனர் எனவும் ஏனைய அரிசி வகைகள் விளைவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நாட்டில் தொடர்ந்தும் அரிசியின் விலை உயர்வாக காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# "தற்போதைய அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும்"

வரிச் சுமையை குறைக்கும் பயணத்தை மேற்கொள்வதே 42% ஆனோரின் விருப்பத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள தற்போதைய ஜனாதிபதியின் பொறுப்பாகும். இந்த வரிச் சுமையினால் மக்களின் வாழ்வு சீர்குலைந்துள்ளது. இந்த வரிகளினால் ஒரு நாடு முன்னோக்கிச் செல்ல முடியாது. மூளைசாலிகள் வெளியேற்றம் அதிகரித்துக் காணப்படுகிறது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் இத்தருணத்தில், இந்த தாங்க முடியாத வரிச்சூத்திரம் திருத்தப்பட்டு சலுகை ரீதியான நிவாரண வரிச் சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதி அமைப்பாளர் அப்சாரி திலகரத்ன ஏற்பாட்டில் புதன்கிழமை(16) கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டில் வாழும் 220 இலட்சம் மக்கள் பல்வேறு கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த சவால்களை முறியடிக்க நான் வழிவகுப்பேன்.

வங்குரோத்து தன்மையால் பொருளாதாரத்தைச் சுருங்கச் செய்யும் அரச கொள்கையினால் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, பணவீக்கம் அதிகரித்து மக்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது.

பொருளாதார பொறிமுறை பலவீனமடைந்து, பொருளாதார வளர்ச்சி சுருங்கி இருக்கும் எமது நாடு, 2028 முதல் மீண்டும் கடனை செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் செயல்படுவது இங்கு மிகவும் முக்கியமானது. பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இது முக்கியமானது என சஜித் பிரேமதாச தெரிவித்தார். அத்துடன் முன்னாள் அரசாங்கம் தேசியக் கடன் மறுசீரமைப்பின் போது மக்கள் மீது அதிக சுமையை ஏற்றி, மக்களுக்கு அழுத்தங்களையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இவ்வாறு மக்களுக்கு ஏற்படுத்திய அசௌகரியங்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியே முன்னின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மக்களுக்கு நிவாரணம் கிடைக்காத காரணத்தினால், முன்னாள் அரசாங்கம் ஏற்படுத்திய உடன்படிக்கையில் திருத்தங்களை ஏற்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடியுள்ளது.மக்கள் சார் உடன்படிக்கையை எட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருந்தது. ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளிலும் நாம் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# “முடிந்தவரை திருடுங்கள்; பிடிபடாதீர்கள்”

மேலும் அவர் பேசியதாவது,

எனது பாராளுமன்ற மேசைக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொண்டு வரப்பட்டது. அப்போதும் நான் பிரதமராக இருந்தேன். இதை எடுத்துக்கொண்டு இப்போது வெளியேறு என்று நான் சொன்னேன். எனது அரசில் இருந்த ஒரு அமைச்சரின் கணவரால் அது கொண்டு வரப்பட்டது. நான் உன்னைக் கைது செய்து விடுவேன். இப்போதே இங்கிருந்து வெளியேறு” என்று சொன்னேன். அப்போது இந்த நபருடன் சிங்கப்பூர் தொழிலதிபர் ஒருவரும் இருந்தார்.

ஊழலுக்குப் பழக்கப்பட்ட மூத்தவர்களின் மனதை மாற்றுவது சாத்தியமில்லை, சிறு வயதிலிருந்தே விழுமியங்களை வடிவமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

“உங்களால் முடிந்தவரை திருடுங்கள், ஆனால் பிடிபடாதீர்கள்” என்று தனது அமைச்சரவையிலும் தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி எம். பி.க்களிடமும் கூறி வந்த ஒரு ஜனாதிபதி இங்கிருந்தார்.

எல்லோரும் திருடினார்கள், யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த அமைப்புதான் எமது நாட்டை சீரழித்துள்ளது.

தொழிலதிபர்கள் தமது திட்டங்களைப் பாதுகாக்க லஞ்சம் கொடுக்கிறார்கள் என்றால், பரவலான ஊழல் இறுதியில் தேசிய திவால் நிலைக்கு இட்டுச் செல்லும்.

நீங்கள் அந்த திட்டத்தை ஒருமுறை அல்லது இரண்டு முறை பெறலாம். ஆனால் அது முழு நாட்டின் நடைமுறையாக மாறும்போது, நாடு வங்குரோத்தடைந்து விடும் என்பதை நீங்கள் உணர மாட்டீர்கள்” என்றும் அவர் கூறியுள்ளார்.

# தேங்காய் எண்ணெயால் ஆபத்து

எனவே, தற்போது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யின் தரம் குறித்து ஆய்வு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் சில வகை தேங்காய் எண்ணெய்யில் புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான இரசாயனங்கள் உள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர் சந்துன் ஹேமந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தொடர்பில் தேவையற்ற சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கடந்த வாரம் உறுதியளித்திருந்தார்.

இலங்கைக்குத் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும் போது, உணவுப் பரிசோதகர்களால் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுங்கப் பரிசோதனைகளுக்கு மேலதிகமாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வியாபாரத்தளங்களில் விற்பனை செய்யப்படும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் குறித்து தொடர்ந்தும் சோதனைகளை மேற்கொள்வதாக உபுல் ரோஹன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “கொடுத்ததால் கேட்கிறோம்"

தலவாக்கலை- ஹொலிரூட் பகுதியில் வியாழக்கிழமை (17) இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவித்ததாவது,

விமர்சனங்கள் பல இருந்தாலும் நான்கு வருடகாலமாக மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தேன்.

அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்குக் களத்தில் இறங்கி நான் குரல் கொடுத்திருக்கின்றேன். எந்த இடத்திலும் நான் ஓடி ஒழியவில்லை. நாடு வங்குரோத்து அடைந்த போது கூட, மலையகத்தைப் பொறுத்த வரையில் இரண்டு சம்பள உயர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

2020ஆம் ஆண்டு சொன்னது 1000 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுத்தோம். 2024 ம் ஆண்டு சம்பள நிர்ணய சபை ஊடாக 1350 சம்பளத்தைப் பெற்றுக் கொடுத்தோம்.

இது கூட்டு ஒப்பந்தத்தினூடாக அல்ல. சம்பள நிர்ணய சபையில் தொழிலாளர்களுக்கு 1350 சம்பளம் கொடுக்கக் கூடாது என தற்போதைய ஜனாதிபதியின் தொழிற்சங்கமே எமக்கு எதிராக வாக்களித்தார்கள்.

ஆரம்பகாலம் முதல் நான் சொல்லி வருவது எம்மிடம் இருப்பது 10 ஆயிரம் வீடுகள். ஆனால், 10 ஆயிரம் வீடுகளை வைத்து ஆறு அரசியல்வாதிகள் ஒன்றை இலட்சம் பேரை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை 30 சுயாதீன கட்சிகள் சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளன. எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் பிரதிநிதித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நான் வரலாற்றை வைத்துக்கொண்டு உங்களிடம் வாக்கு கேட்டு வரவில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை தேர்தலில் போட்டியிடுகின்ற பட்டியலை எடுத்து நோக்கினால், புரொட்டொப் தோட்டப் பகுதியில் முகாமையாளராக இருந்து தொழிலாளர்களைத் தாக்கியவர் தான் நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வேட்பாளர்.

நாட்டை மீட்டெடுத்த ரணில் விக்ரமசிங்கவை மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். அதேபோல், எம்மையும் தூக்கிப் போடாமல் இருந்தால் சரி. இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் மட்டுமே மலையகத்தில் பல்வேறு அரச நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு நியமனங்களைப் பெற்றுக் கொடுத்தோம். குடும்ப அரசியலுக்கு எதிர்ப்பு என கூறியவர்கள் களுத்துறை மாவட்டத்தில் தந்தையும் மகனும் போட்டியிடுகின்றனர். எனது குடும்பத்தில் நான் மட்டுமே போட்டியிடுகின்றேன். எனவே, நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும், எமது மக்கள் நன்கு சிந்தித்து வாக்களியுங்கள் என்றார்.

# எமது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது

மேலும், அவர் தெரிவிக்கையில், நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்காக எத்தனையோ சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறங்கியுள்ளன. அதேபோல் மக்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் எல்லாம் அரசியல் கட்சிகளில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களில் இதுவரை காலமும் மக்களுக்கு சேவை செய்தவர்கள் யார்? அவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்ட போது உடனிருந்து உதவியவர்கள் யார், எதிர்காலத்தில் அவர்களுக்கு உதவப் போவது யார் என்று மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கமும் மக்கள் முன்னணியும் ஒற்றுமையாக இணைந்து தேர்தலில் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்த மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி வெற்றி பெறுவதை யாராலும் தடுக்க முடியாது. அதற்கான பிரசார நடவடிக்கைகளை நாம் கொண்டு வருவதோடு முறையாகச் சேவை செய்த எங்களுக்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாம் கடந்த காலங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்து அதில் வெற்றி கண்டுள்ளோம். இந்த தேர்தலிலும் நிச்சயமாக வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்வோம். நுவரெலியா மாவட்டத்தில் 2015, 2020 ஆகிய பாராளுமன்ற தேர்தல்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி மூன்று உறுப்பினர்களைப் பெற்றிருந்தது போல கொழும்பு கண்டி பதுளை மாவட்டங்களிலும் நாம் உறுப்பினர்களைப் பெற்றிருந்தோம். பாராளுமன்றத்தில் எமது உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆக இருந்தது. இந்தத் தேர்தலிலும் அந்த எண்ணிக்கை குறையாது. தேர்தலில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் ஏன பலர் போட்டியிடலாம். அவர்கள் அவரவர் தொழிலில் பாண்டித்தியம் பெற்றுவர்களாக இருக்கலாம் ஆனால் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய அனுபவம் இருக்காது. 2919 ஜனாதிபதித் தேர்தலில் சிறந்த நிர்வாகி என மக்கள் வாக்களித்து கோட்டாபாயவை வெற்றி பெறச் செய்திருந்தார்கள். அவருடைய திறமை எவ்வாறு அமைந்தது, நாடு எந்த அளவுக்கு வளர்ச்சி கண்டது, வங்குரோத்து நிலையை அடைந்தது என்பதை மக்கள் அறிவார்கள் என்றார்.

# வலது கை விரலில் அடையாளம்

வாக்காளரின் இடது கையில் பெருவிரல் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவரது வலது கையில் உள்ள வேறேதெனுமொரு விரலில் அடையாளமிடப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கீழே இணைக்கப்பட்டுள்ளது.

# ஈஸ்டர் தாக்குதல்; “அரசாங்கம் வெளியிடா விட்டால்நா ன் பகிரங்கப்படுத்துவேன்”

உதய கம்மம்பிலவிடம் அவ்வாறான அறிக்கைகள் இருந்தால் அதனை மூன்று நாட்களுக்குள் வெளியிட வேண்டும் என, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே முன்னாள் எம்.பி. உதய கம்மம்பில, கொழும்பில் விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கைகளை வெளியிடுவதாக, தாம், உறுதியளித்தாலும் அதனை ஒருபோதும் அரசாங்கத்திடம் கையளிக்கப் போவதில்லை என்றும் அதனைப் பகிரங்கமாகவே வெளியிடப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பான செனல் 4 அறிக்கை மற்றும் அத்தாக்குதல் தொடர்பாக புலனாய்வு அமைப்புகள் செயற்பட்ட விதம் தொடர்பில் ஆராய்வதற்கு, நியமிக்கப்பட்டிருந்த குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பக்கங்கள் காணாமற் போயுள்ளமை தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படும் என அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது. அந்த அறிக்கைகளின் பக்கங்கள் காணாமற் போகவில்லை என்றும் அரசாங்கத்திடம் உள்ள அந்த அறிக்கைகளை அரசாங்கம் ஏழு நாட்களுக்குள் வெளியிட வேண்டும் என்றும் தெரிவித்த கம்மகம்பில, அதனை அரசாங்கம் வெளியிடாவிட்டால் பகிரங்கப்படுத்துவேன்.

அரசாங்கத்தின் ரகசிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவோ அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழோ தம்மை கைது செய்வதற்கான விடயங்கள் தொடர்பில் வெவ்வாய்யகிழமை (15) அரசாங்க உயர் மட்டத்தினர் கலந்துரையாடியுள்ளதாக தெரிய வருகிறது. அந்த அறிக்கை தமக்கு கடந்த பத்தாம் திகதி கிடைத்தவுடனே, அது தொடர்பில் தாம் நான்கு நாட்களுக்குள் அறிவித்துள்ளது. எத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும், நாட்டு மக்களுக்கு உண்மையை அறிவிப்பதிலிருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை.

இந்த அறிக்கை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே கிடைத்ததென்றும் தற்போதைய அரசாங்கத்துக்கு அது மூன்று வாரங்களுக்கு முன்பே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், தமக்கு அது கிடைத்து மூன்று நாட்களே ஆவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மஹர சிறைச்சாலை மரணங்கள்; சி.ஐ.டிக்கு புதிய உத்தரவு

2020ஆம் ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற இப் போராட்டத்தின் போது சிறை அதிகாரிகளும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குற்றம் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் வெலிசர நீதவான் நீதிமன்றம், உத்தரவு பிறப்பித்துள்ள பின்னணியிலேயே சட்டமா அதிபர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

மஹர சிறைக் கைதிகள் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனரா? என்பதை உறுதிப்படுத்த PCR சோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்றும், கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட கைதிகளை முறையான சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரி கடந்த 2020 நவம்பர் மாதம் 29ஆம் திகதி போராட்டம் நடத்தினர்.

இதன்போது சிறை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 கைதிகள் உயிரிழந்தனர்.

பின்னர் வெலிசர நீதவான் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 2023 ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி தீர்ப்பை அறிவித்த வெலிசர நீதவான் துசித தம்மிக்க உதிவவிதான, மஹர சிறைச்சாலையில் 11 கைதிகள் கொல்லப்பட்டமை குற்றம் என தீர்மானித்தார்.

கிளர்ச்சியை அடக்குவதற்கு குறைந்தபட்ச பலத்தை பயன்படுத்தி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான ஆதாரங்களை சட்டமா அதிபர் முன்வைத்த போதிலும், இறந்த கைதிகள் சுடப்பட்ட விதம், கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகவோ அல்லது மனிதாபிமான நடவடிக்கைக்காகவோ சுடப்பட்டதாகத் தெரியவில்லை என நீதவான் குறிப்பிட்டார்.

குறைந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்தி முழங்காலுக்கு கீழே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், 11 கைதிகளும் தலை, வயிறு, மார்பு போன்றவற்றில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக நீதவான் தனது தீர்ப்பில் மேலும் விளக்கினார்.

இதன்படி, மஹர சிறைச்சாலையில் கைதிகளின் உயிரிழப்புக்கள் குற்றமாகும் என தீர்மானித்த நீதவான், குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிறைச்சாலை மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் அனைவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அன்றைய தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டார்.

எவ்வாறாயினும், நீதிமன்றம் இவ்வாறானதொரு உத்தரவை பிறப்பித்துள்ள போதிலும், மஹர சிறைச்சாலையில் உள்ள 11 கைதிகளின் மரணம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளருக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஹரிபிரியா ஜயசுந்தரவினால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், குறித்த மஹர சிறைச்சாலை சம்பவத்தின் போது சிறைச்சாலை அதிகாரிகளும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் சட்டரீதியாக செயற்பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட பாதுகாப்பு உரிமைகளை மீறி செயற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் 77ஆவது பிரிவின் பிரகாரம் சிறைச்சாலை அதிகாரிகள் செயற்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மஹர சிறைச்சாலையில் 11 கைதிகளின் மரணம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்துள்ள மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், இது சம்பந்தமான சட்டமா அதிபர் திணைக்களத்தின் கோப்பினை மூடவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# ‘வப்’ பௌர்ணமி தினம்

‘வப்’ பௌர்ணமி தினமான செவ்வாய்க்கிழமை (17) அன்று களனி ரஜமஹா விகாரையில் பக்தர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதில் வெளிநாட்டவர்களும் கலந்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



















பாராளுமன்றத்திற்கு சென்ற

# “எமது மலையக பிரதிநிதிகள் என்ன செய்தனர்?”

■ க.கிஷாந்தன்

“இலங்கையில் கொள்கை அரசியலை முன்னெடுத்த பெருந்தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள்தான் நான். மாறாக கோடிகளுக்கு விலைபோகும் நபர் கிடையாது. கோடிகளை வாங்கிய அரசியல்வாதிகளே, இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்” என ஐக்கிய ஜனநாயக குரல் எனும் கட்சியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

தலவாக்கலையிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் வியாழக்கிழமை (17) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2020 பொதுத்தேர்தலில் நான் சுயேச்சையாக களமிறங்கி இருந்தேன். அப்போதுகூட முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் 20 கோடி ரூபா பணம் வாங்கிவிட்டே தேர்தலில் போட்டியிட்டதாக எதிரணி தரப்பில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, வாக்குகளை சிதறடிப்பதற்காகவே நான் களமிறக்கப்பட்டுள்ளேன் என்றெல்லாம்கூட தகவல்கள் பரப்பட்டன. ஆனால், இவை எதுவும் உண்மை அல்ல. எனது தந்தையின் நண்பர்களின் உதவியுடன்தான் பொதுத்தேர்தலை எதிர்கொண்டேன்.

தேர்தலில் மக்கள் எனக்கு ஆதரவு வழங்கி இருந்தனர். எனினும், பாராளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாக்குகளை நோக்கி



நகரமுடியவில்லை. இவ்வாறு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாததால் அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டேன்.

எனக்காக வேலை செய்த தொண்டர்களைக்கூட பழிவாங்கினார்கள். இதற்கு எதிராக குரல் எழுப்பினேன். அவ்வாறு குரல் எழுப்பும்வேளைகளில் பழிவாங்கல்கள் அதிகரித்தன. அதன்பின்னர் அமைதி காத்தேன். அடக்குமுறைகள் குறைந்தன. எனவே, அரசியலில் அமைதியும் தேவையெனக் கருதி அமைதி காத்தேன். பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்காத நான் ஐந்து வருடங்கள் எங்கே சென்றேன் என கேட்கின்றனர். ஆனால், பாராளுமன்றத்திற்கு சென்ற எமது மலையக பிரதிநிதிகள் என்ன செய்தனர்? தொலைக்காட்சி விவாதங்களில்கூட அடித்துக்கொள்ளும் நிலைமை அல்லவா காணப்பட்டது?

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து களமிறங்க வேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது. எனினும், அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதன்பின்னர் சுயேச்சையாக போட்டியிட திட்டமிட்டிருந்தேன்.

அவ்வேளையிலேயே தலைவர் ரஞ்சன் ராமநாயக்க என்னை அழைத்து கதைத்தார். ஊழல் அற்ற அரசியலை செய்வதற்காக புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளதாகக் கூறினார். அதில் போட்டியிடுமாறு கேட்டுக்கொண்டார். ஐக்கிய ஜனநாயகக் குரல் என்ற அந்த கட்சியின் கொள்கை பிடித்திருந்தது. அதனால்தான் அக்கட்சி ஊடாக களமிறங்கியுள்ளேன்.

2020இல் பஸில் ராஜபக்ஷவிடம் பணம் வாங்கியதாகக் கூறியது உண்மையெனில், தேர்தலின் பின்னர் நான் ஆளுங்கட்சியுடன் பதவிகளை பெற்று அல்லவா இருந்திருக்க வேண்டும்? அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. கடந்த முறை 20 கோடி என்றவர்கள் இம்முறை 15 கோடி என்கிறார்கள். கோடிகளுக்கு விலைபோகும் நபர் நான் கிடையாது. எனது தந்தை அமரர் சந்திரசேகரனின் வழியிலேயே நான் பயணிக்கின்றேன்.

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை நிச்சயம் மாற்றம் வரும். பழைய அரசியல்வாதிகளை நம்பி ஏமாந்ததுபோதும், இளைஞர்கள், புதியவர்கள் வரவேண்டும் என மக்கள் கருதுகின்றனர்.

எனவே, மக்களுக்காக குரல் கொடுக்கும் என்னை அவர்கள் சபைக்கு அனுப்பி வைப்பார்கள். பாராளுமன்ற தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறுவேன் என தெரிவித்தார்.

# திருட்டு நகைகளுடன் ஐவர் கைது

யாழ். தென்மராட்சியில் சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம் திருடப்பட்ட 25 இலட்சம் ரூபா பெறுமதியான 16 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஐந்து சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 10ஆம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல் வேளையில் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த 16 பவுண் நகைகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றைத் திருடி தப்பித்திருந்தனர்.

கணவன் - மனைவி இருவரும் பணிக்குச் சென்று வீடு திரும்பிய



நிலையிலேயே வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டு அது தொடர்பில் பாதுகாப்புக் கமராவின் ஆதாரத்துடன் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், பொலிஸார் செவ்வாய்க்கிழமை (15) திருட்டுச் சந்தேகநபர்களான இரண்டு பெண்கள் மற்றும் நகைகளைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள் இருவர் உட்பட ஐவரைக் கைது செய்தனர்.

# கொலை குற்றவாளிக்கு மரண தண்டனை

கடந்த 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு காலி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

காலி மேல் நீதிமன்றில் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த இந்த கொலை வழக்கு விசாரணையில், காலி- இமதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரடுஹேனகொட பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர் சட்டவிரோத மின்சார கம்பிகளைப் பயன்படுத்தி மின்சாரத்தைப் பாய்ச்சி நபரொருவரை கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதால் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

HPV தடுப்பூசி செலுத்தப்பட்ட

# 5 மாணவிகள் வைத்தியசாலையில்

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்கான எச்.பி.வி. (HPV) தடுப்பூசி செலுத்தப்பட்ட 5 மாணவிகள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹொரணை- அங்குருவாதொட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

7ஆம் வகுப்பில் கல்வி கற்று வரும் 12 வயதுடைய ஐந்து மாணவிகளே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்குருவாதொட்ட, வெனிவல்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிற்குச் சென்ற மில்லனிய சுகாதார வைத்திய அதிகாரிகள் சிலர்



அப்பாடசாலையில் 7ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 26 மாணவிகளுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்கான எச்.பி.வி. தடுப்பூசியை செலுத்தியுள்ளனர்.

இதன்போது, எச்.பி.வி. தடுப்பூசியை செலுத்தப்பட்ட மாணவிகளில் ஐவர் திடீரென சுகயீனமுற்றுள்ளனர்.

இவ்வாறு சுகயீனமுற்ற மாணவிகள் ஐவரும் ஹல்தொட்ட பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹொரனை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அங்குருவாதொட்ட பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நுவரெலியாவில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்த செந்தில்

பொதுத் தேர்தலுக்கான வாக்குகளைச் சேகரிக்கும் பணியை இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளார்.

இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிட உள்ள நிலையில்,இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் ராமேஸ்வரன்,தேசிய அமைப்பாளர் சக்திவேல் ஆகியோருக்காக டிலறி, போர்டயஸ், பொய்ஸ்டன், இன்ஜெஸ்டி,வனராஜா, மாணிக்கவத்த இலக்கம் 01,02 ஆகிய தோட்டங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் செந்தில் தொண்டமான் ஈடுபட்டார்.

# நீரில் மூழ்கி மாணவர் உயிரிழப்பு

கொட்டதெனிய- ஹல்லொலுவகந்த பிரதேசத்தில் நீரில் மூழ்கி சிறுவன் உயிரிழந்துள்ளார். 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுவன் தனது 05 நண்பர்களுடன் புதன்கிழமை (16) மாலை நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது .

அத்துடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டதெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்ணின் சடலம் மீட்பு

நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பிடத்தில் இருந்து அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று வியாழக்கிழமை (17) காலை மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து நிலையத்தினுள் ஒருவர் இறந்து கிடப்பதாக நுவரெலியா மாநகர சபை ஊழியர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபருடன் இன்னுமொரு பெண்ணும் கடந்த 5 நாட்களுக்கு முன்பிலிருந்து நுவரெலியா பேருந்து தரிப்பிடத்தில் யாசகம் பெற்று வந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அதிக குளிர் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தங்களைத் தாங்களே மக்கள் அணிதிரட்ட வேண்டும்

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஊழல், மோசடியற்ற அரசாங்கத்தை அமைப்பதற்காக பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களை எதிர்பார்த்து, பொதுத் தேர்தலில் பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றது.

ஊழல், மோசடி ஒழிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதேபோல, போதைப்பொருள் உள்ளிட்ட சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இல்லையேல், தூய்மையான நாட்டை கட்டியெழுப்பமுடியாது.

ஒவ்வொரு ஆட்சியிலும், போதைப்பொருள், கஞ்சா வியாபாரிகள் மற்றும் பாதாள உலக உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்கின்றனர். ஆனால் இந்த கைதுகள் முறைசாராமையால் குற்றவாளிகள் பிணை மனுக்களைச் சமர்ப்பித்து மறுநாளே கூண்டில் இருந்து வெளியே வந்துவிடுகின்றனர்.

ஒரு போதைப்பொருள் வியாபாரி கைது செய்யப்பட்டால், அந்த வியாபாரத்தில் ஈட்டப்பட்ட பெரும் பணம், வழக்கறிஞர்களுக்குச் செல்கிறது. பிணை பணம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறான குற்றச்செயல்களில் அதிகம் கைது செய்யப்பட்டவர்கள் உற்பத்தியாளர் மற்றும் விநியோகஸ்தர் அல்ல, நுகர்வோரைக் கைது செய்யப்படுகின்றனர்.

போதைக்கு அடிமையானவர், உடல் நலிந்த உடலுடன் இருப்பார். அவர்தான் வாடிக்கையாளர். போராடும் வலிமை அவனிடம் இருக்காது.. அடி கொடுத்தால் பொலிஸ் தூக்கு மேடைக்குச் செல்ல வேண்டும் ஏனென்றால், ஒரே அடியில் அந்த நபர் மரணித்துவிடவும் கூடும். ஆனால், பெரிய பணமும் பிடிபட்டிருக்காது.

சிறைக்குச்செல்லும் போதைப்பொருள் வியாபாரிகள் அங்கிருந்து தங்கள் தொழிலை நடத்த ஆரம்பிக்கின்றனர். சிறையில் தனி பொருளாதாரம் உள்ளது. இந்த பொருளாதாரத்தில் போதைப்பொருள்கள், தொலைபேசிகள், பிற பொழுதுபோக்குகள் உள்ளன. பில்லியன் கணக்கான ரூபாய்கள் கைமாறும்.

அதுமட்டுமன்றி, பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. கூட்டுப் பலாத்காரம் செய்பவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தாதது பெரும் குற்றம். பலாத்காரம் செய்தவர்களில் பெரும்பாலானோர், பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக, சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக உள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் இப்படிப்பட்டவர்களின் வீடுகளின் முன் “இங்கே ஒரு காம மனிதர் வாழ்கிறார்” என்று பலகை வைக்கப்படுகிறது. அவ்வீட்டில் இருந்து சுமார் அரை கிலோமீட்டருக்கு காமத்துரையைப் பற்றிய எச்சரிக்கைகள் அடங்கிய விளம்பரப் பலகைகள் உள்ளன. இப்படி இலங்கையில் நடந்தால் காமத்துரர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டதாக ஐரோப்பிய நாடுகள் ஜனாதிபதி மாளிகைக்கு வரும்.

இந்த நாட்டில் உள்ள சிலரால் எவ்வாறு இலங்கையை இவ்வாறான குற்றச் செயல் நாடாக மாற்ற முடிந்தது என்பது கேள்விக்குறியே. இந்த நாட்டில் 2500 ஆண்டுகள் பழமையான கலாச்சாரம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவை வெறும் வாசகங்கள். இந்த நாட்டு மக்கள் இந்த செத்த திருமணங்களைப் பார்த்து ஏமாந்து விடக்கூடாது. பாலியல் குற்றவாளிகள், திருடர்கள் மற்றும் கடத்தல்காரர்களுக்கு எதிராக இந்நாட்டு மக்கள் தங்களைத் தாங்களே அணிதிரட்ட வேண்டும் என்பதே எமது புரிதலாகும்.

தமிழ்Mirror க்கு
www.tamilmirror.lk
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கொள்ளையர்களின் பேச்சுகள் கூட, சிலருக்கு உபதேசமாகத் தெரிவதுண்டு. தங்களுக்கான நலன்களைப் பெற்றிட, கண்டவர்களையும் தலைவர்களாக மதிக்கிறார்கள்.

மேடையில், பொது வெளியில், எந்தவிதமான ஒழுக்கமும் அற்றவர்கள் தேனினும் இனிமையாகக் கதைத்து, மக்களை மருட்டுகின்றார்கள். ஆனால், இவர்களின் அந்தரங்க ங்களை மக்கள் அறிவார்கள். ஒருசிலர் மட்டுமே, கேடுகெட்டவர்களின் பேச்சில் மதிமயங்கிக் கிடப்பார்கள்.

எதிர்காலம் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். இன்று உலகம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. காலமாற்றங்கள் இதில் முக்கியமானது. மக்கள் தொகை அதிகரித்தல், பொருளாதாரத் தளம்பல்கள் என பல விடயங்களை நாங்கள் அறிவோம்.

இந்த நிலையில், வளங்கள் இருந் தும், ஆட்சியாளர்களின் தவறான முடிவுகள், சுரண்டல்களால் எமது நாடு பெரும் பிரச்சினைகளுக்குக்கள் அமிழ்ந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம், கள்ளக்கடத்தல்கள் எனப் பலவாறான அசுர காரியங்கள், எமது நாட்டைச் சீரழித்து வருகின்றன. என்ன கொடுமை இது?

உணர்வற்ற நிலையில் மக்கள்! இந்த நிலை மாற மக்கள் என்ன செய்வது எனத் திணறுகின்றனர். மக்களிடையே பேதங்கள் அகலவேண்டும். ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்..

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தீர்வு வேண்டும்



மஸ்கெலியா நகரில் உள்ள பிரதான வீதியையும் அஞ்சலக வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதிகளில் வழங்கப்பட சகல காணிகளிலும் சட்டவிரோதமான முறையில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

அதற்கான அனுமதியையும் அம்பகமுவ பிரதேச சபை மற்றும் மஸ்கெலியா பிரதேச சபைகள் வழங்கியுள்ளது.

குறித்த கட்டிடங்களால் பாரிய அளவிலான அசௌகரியத்தை அப்பகுதி மக்கள் எதிர் கொள்கின்றனர்.

குறிப்பாக பிரதான வீதியையும் அஞ்சலக வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதியில் அதிக துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை, பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு தெரிவித்தும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இதற்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அமைச்சு முன் வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி.பெருமாள்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 22

# சமாதானத்திற்கான போரரசியல் - 6



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

2001இல் புதிதாக ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தது. முன்னைய குமாரதுங்க அரசாங்கம் தொடங்கியதைத் தொடர்வதற்குப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க முடிவெடுத்தார்.

இதற்கு சர்வதேசத்தின் ஆதரவு முக்கிய காரணியாக இருந்தது. 1998இல் பௌத்த புனிதத் தலமான தலாதா மாளிகை மீதான தாக்குதலையடுத்து புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்படும் வரை பேச்சுக்கு வரப் புலிகள் மறுத்தனர். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் நிலையைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் வகையில், தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற அந்தஸ்து ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதையும் புலிகள் சுட்டிக்காட்டினர்.

புலிகளின் இந்த வாதங்களின் நியாயங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டது. மோதல் தவிர்ப்பு தொடர்பான துறைசார் நிபுணர்கள் புலிகளின் கவலைகளைப் பேச்சுவார்த்தைகளில் ஒரு உன்னதமான தத்துவார்த்த சங்கடமாகச் சுட்டிக்காட்டினர். சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படும் ‘சம அந்தஸ்து’ போன்ற வாசகங்களை மேற்கோள் காட்டி, வெற்றிகரமான பேச்சுவார்த்தை செயல்முறைக்கு உறுதியான அரசியல் அடித்தளத்தை அமைப்பதற்கு புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் சுட்டிக்காட்டினர். அரசாங்கம் தடையை நீக்கத் தயாராக இருந்தபோதும் எதிர்க்கட்சிகள் இதைக் கடுமையாக எதிர்த்தன. ஆனால், தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியது.

இதற்கிடையில், 10 ஏப்ரல் 2002 அன்று, வன்னிக் காடுகளில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், புலிகளின் தலைவர் பிரபாகரன் தீர்வுக்கான வழியைப் பரிந்துரைத்தார். அரசாங்கத்தின் பல அரசியல் எதிரிகளை ஆச்சரியப்படுத்தும் வகையில், பிரபாகரன் தன்னாட்சி மற்றும் உள்-சுய நிர்ணய கொள்கைகளின் அடிப்படையில், அரசியல் கட்டமைப்பிற்குள் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அரசியல் தீர்வை தேடுவதற்குத் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

புலிகளின் தலைமையின் இந்தப் புதிய நகர்வு, சர்ச்சைக்குரிய திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலான கடின பேரம் பேசும் அதன் கடந்தகால மரபுக்கு முரணாக இருந்தது.

புலிகள் தமது அரசியல் நிலைப்பாட்டை நிபந்தனைக்குட்பட்ட பேச்சுவார்த்தையிலிருந்து கொள்கை ரீதியான பேச்சுவார்த்தைகளுக்கு மாற்றியமைத்தது, ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு ஒரு புதிய வாழ்வாதாரத்தை வழங்கியது. ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு எதிராக ஏற்கெனவே ஜே.வி.பி. மற்றும் பொதுஜன முன்னணியின் அரசியல் பிரசாரத்தால் அணிதிரட்டப்பட்ட பெரும்பான்மை சிங்களவர்களின் கருத்தை எதிர்கொள்வதற்கான வாய்ப்பை அரசாங்கத்துக்கு வழங்கியது.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக அனைத்து அரசியல் நாடகங்களுக்கும் மத்தியிலும், புலிகளும் ஐ.தே.மு. அரசாங்கமும் பரஸ்பரம் இணக்கமான சமாதான புரிந்துணர்வுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளில் இறங்கினர்.

மோதலை சர்ச்சைக்குரிய வழிகளில் வரையறுப்பதில் அவர்கள் கவனமாக இருந்தனர். புலிகளின் கண்ணோட்டத்தில், இந்த மோதல் ஒரு தேசியப் பிரச்சினையாகவும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பிரச்சினையாகவும் முன்வைக்கப்பட்டது. ஐ.தே.மு. அரசாங்கத்தின் பார்வையில் அது ஒரு ‘வடக்குக் கிழக்கில் நடைபெறும் போர்’ என்றே பார்க்கப்பட்டது.

இன்னொரு வகையில், இது அக்காலப்பகுதியில் பிரபலமடைந்திருந்த ‘அபிவிருத்தியின் வழி சமாதானம்’ என்ற தாரண்மைவாத அமைதியைக் கட்டியெழுப்பும் சித்தாந்தத்தில் ஆழ வேரூன்றி நின்றது.

இதற்கிடையில் ஐ.தே.மு. மற்றும் புலிகளும் நடைமுறை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சமாதானம் பற்றிய தமது பார்வையை முன்வைத்தனர். இதனால், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் போன்ற மிகவும் சர்ச்சைக்குரிய விடயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அரசியல் பேச்சுவார்த்தைகளில் இறங்கினார்கள்.

அரசாங்கத்தின் பார்வையில், இன மோதலை யுத்தம் மற்றும் வன்முறையிலிருந்து விலக்குவதன் மூலம் சாதகமற்ற பாதைகள் வெளிப்படுவதை வேண்டுமென்றே கட்டுப்படுத்துவதன் மூலம் வரையறுக்கப்பட்ட சமாதான நிகழ்ச்சி நிரலைப் பாதுகாப்பதே முதன்மையான கவனம்.

எனவே, ஆரம்பக் கட்ட பேச்சுவார்த்தைகளின் போது, கவனம் செலுத்துவதற்காக ஆயுத மோதலின் சில விளைவுகளை மட்டுமே அரசாங்கம் தேர்ந்தெடுத்தது. பல இடைக்கால கட்டங்களில் அதை நிர்வகிப்பதற்கான படிப்படியான அணுகுமுறையாக அதை உருவாக்கலாம் அவர்கள் நம்பினர்.

அரசாங்கத்தின் அணுகுமுறை பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினருக்கு ஒரு நேரத்தில் ஒரு பிரச்சினையைத் தீர்க்கவும், அதிகரிக்கும் முன்னேற்றத்தைப் பாதுகாக்கவும் மட்டுமே அனுமதித்தது. இது நிரந்தர தீர்வை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

இந்த குறிப்பிட்ட பேச்சுவார்த்தை மூலோபாயத்தின் மூலம், முக்கிய மற்றும் புறப் பிரச்சினைகளுக்குக் கூட்டு மாற்றுகளை வடிவமைப்பதில் தொடர்புடைய பிற கட்சிகளும் பங்கேற்கக்கூடிய ஒரு அரசியல் செயல்முறையின் நிறுவனமயமாக்கலுக்கான இடத்தை படிப்படியாகத் திறக்கலாம் என அரசாங்கம் நம்பியது.

அரசாங்கம், பேச்சுவார்த்தை கட்டமைப்பானது சமாதான முன்னெடுப்புகளின் சர்வதேச பாதுகாவலர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரையறுக்கப்பட்ட மற்றும் நடைமுறை கட்டமைப்பிற்குள் மோதலை நிர்வகிப்பதற்கான ஒரு ‘சமாதான ஒப்பந்தத்திற்கு’ வழிவகுக்கும் என எதிர்பார்த்தது. துரதிர்ஷ்டவசமாக, அரசாங்கத்தின் குறிப்பிட்ட பேச்சுவார்த்தை கட்டமைப்பானது, பேச்சுவார்த்தைகளின் வெற்றிக்குச் சர்வதேச அரங்காடிகளை மட்டுமே நம்பியிருந்தது. அதற்கு உகந்த நாடு தழுவிய அரசியல் ஆதரவு நிலைமைகளைக் கட்டியெழுப்புவதைப் புறக்கணித்தது.

எவ்வாறாயினும், அக்காலப்பகுதியில், மிகவும் துருவப்படுத்தப்பட்ட சிங்கள அரசியல் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் போட்டி அரசியல் உயரடுக்குகள் ஒருவருக்கொருவர் முயற்சிகளை எதிர்க்கும் அரசியல் செயல்பாட்டில் இறங்கியிருந்ததால், ஒரு பரந்த சமூக ஒருமித்த கருத்தை உருவாக்கும் வாய்ப்பு குறைவாகவே இருந்தது.

கொழும்பில் அனைத்து அரசியல் நாடகங்கள் இருந்தபோதிலும், இலங்கையின் 2002 பேச்சுவார்த்தை செயல்முறையில் ஈடுபட்ட சர்வதேச அரங்காடிகள் இருதரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கான இடத்தைப் பாதுகாத்தனர். இணைத் தலைமை நாடுகளாக, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் நோர்வே ஆகியன ஏற்படுத்தப்பட்டமையானது பேச்சுவார்த்தைகளுக்கு சர்வதேசப் பரிமாணத்தை வழங்கியது.

நோர்வே வசதிப்படுத்துனராக இருந்தது. சமாதான முன்னெடுப்புகளிற்கான ஆதரவை உறுதிப்படுத்துவதற்காக மேற்குல நாடுகள் தனித்தனியாக தமது பிரதிநிதிகளைக் கொழும்புக்கும் வன்னிக்கும் அனுப்புவதன் மூலம் இச்செயல்முறையின் பாதுகாவலர்களாக அவர்களின் பங்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதை விடுதலைப் புலிகளுக்குக் கோடு காட்டினர்.

கூடுதலாக, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற சில குறிப்பிடத்தக்க சர்வதேச பலதரப்பு அமைப்புகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருடனும் நெருக்கமாக வேலை செய்யத் தொடங்கின. மேலும், ஐக்கிய நாடுகள் சபையும், நாட்டில் ஏற்கெனவே அங்கம் வகிக்கும் அதன் முகவர் அமைப்புகளும் பேச்சுவார்த்தை நடவடிக்கையில் நெருக்கமாக ஈடுபட்டிருந்தன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் போர்நிறுத்தத்திற்குப் பிந்தைய சூழலிலிருந்து வெளிப்படும் தேவைகள் மற்றும் கவலைகளுக்கு ஏற்ப, நடந்துகொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளைச் சரி செய்து சமாதான முன்னெடுப்புகளுக்கு அதன் அர்ப்பணிப்பைக் காட்டியது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை, சர்வதேச அரங்காடிகளின் இணைப்பும் பங்கேற்றும் பயனுள்ளது.

இது இருதரப்புப் பேச்சுக்களுக்கான ‘சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலை’ உருவாக்கியது. மேலும் சமாதான செயல்முறைக்கு சட்டப்பூர்வமான தன்மையைப் பெறுவதற்கும் அத்துடன் வாக்குறுதியளிக்கப்பட்ட சமாதான ஈவுத்தொகைகளை வழங்குவதற்குத் தேவையான நிதிப் பொறுப்புகளைப் பெறுவதற்கும் சர்வதேச ஈடுபாட்டின் அளவு அவசியம் என்பதை அரசாங்கம் அறிந்திருந்தது.

இது போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மோதலுக்குப் பிந்தைய பொருளாதார மீட்புத் திட்டங்களில் சர்வதேச அரங்காடிகளுக்கு ஒதுக்கப்பட்ட பாத்திரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், சர்வதேச அரங்காடிகளின் இந்த பாரிய ஈடுபாடு எதிர்க்கட்சிகளாலும் சில கல்வியியலாளர்களாலும் கடும் விமர்சனத்திற்கு உள்ளானது. இலங்கையின் பேச்சுவார்த்தை செயல்முறையைச் சர்வதேச அரங்காடிகள் கபளீகரம் செய்து விட்டதாகக் கடத்தியதாக அவர்கள் வாதிட்டனர்.

ஜே.வி.பி. சர்வதேச ஈடுபாட்டிற்கு எதிரான பிரச்சாரத்தில் முக்கிய பங்காற்றியது, இந்த அனைத்து சவால்களுக்கும் மத்தியிலும், அரசாங்கம் சர்வதேச செயற்பாட்டாளர்களின் தொழில்நுட்ப திறன்கள், அவர்களின் நடுநிலையான தகவல் தொடர்பு சேனல்கள் மற்றும் அவர்களின் பெறுமதியான நிதி வளங்கள் ஆகியவற்றின் மூலம் புலிகளுடன் ஒரு தீர்வை எட்டுவதற்கு அவர்களைச் சேர்த்துக்கொள்ள உந்துதல் பெற்றது.

புலிகளைப் பேச்சுவார்த்தைச் செயல்பாட்டில் நிலை நிறுத்த ஊக்குவிப்பதற்காக அனைத்து வாய்ப்புகளையும் அணி திரட்டுவதில் இந்த அரங்காடிகளின் மூலோபாய நன்மையையும் இது முன்னறிவித்திருக்கலாம்.

இதற்கிடையில், சமாதான முன்னெடுப்புகளின் வடிவமைப்பு மற்றும் உரிமையில் மேற்குலகின் பங்குகள் இருப்பதாகக் குற்றஞ்சாட்டும் உள்ளூர் குரல்களை அரசாங்கம் பொருட்படுத்தாதது, உள்ளூர் அறிவு, உள்ளூர் அரசியல் சக்திகள் மற்றும் உள்ளூர் அதிகார அரசியலைப் புறக்கணிக்கும் அவர்களின் முயற்சிகள், உள்ளூர் வட்டாரங்களிலிருந்து அரசாங்கத்தைத் தனிமைப்படுத்தியது. அரசாங்கமும் பிரதமர் விக்ரமசிங்க உள்ளூர் அரசியல் உண்மைகளை அறியாதவர்களாகவும் உணர்வற்றவர்களாகவும் இருந்தனர். இந்த நடத்தையின் இந்த இறுதி முடிவு என்னவென்றால், முழு அரசியல் பேச்சுவார்த்தை செயல்முறையும் உள்நாட்டு அரசியல் இயங்கியலிலிருந்து பெருகிய முறையில் தனிமைப்படுத்தப்பட்டது.

# சிறந்த பங்குதாரர் வங்கியாக கொமர்ஷல் வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) தொடர்ந்து நான்காவது ஆண்டாக வர்த்தகம் மற்றும் நிதி பரிவர்த்தனைகளுக்காக இலங்கையின் கொமர்ஷல் வங்கியை அதன் 'முன்னணி பங்குதாரர் வங்கியாக' கௌரவித்துள்ளது.

சிங்கப்பூரின் மாண்டரின் ஓரியண்டலில் நடைபெற்ற ADB யின் 10ஆவது வர்த்தக மற்றும் விநியோகச் சங்கிலி நிதித் திட்ட (TSCFP) நிகழ்வில் தேசியப் பொருளாதாரத்திற்கு கொமர்ஷல் வங்கி வழங்கி வரும் வர்த்தகம் மற்றும் நிதிப் பங்களிப்புகளுக்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.




2023 ஜூலை 1 மற்றும் 2024 ஜூன் 30க்கு இடையில் இலங்கையின் வர்த்தகம் மற்றும் விநியோக சங்கிலி நிதிதளத்தில் அதிக எண்ணிக்கையிலான பரிவர்த்தனைகளை ADB உதவியுடன் கொமர்ஷல் வங்கி மேற்கொண்ட சாதனையானது அங்கீகரிக்கப்பட்டது. ADB TSCFP விருதுகள் விழாவில் கொமர்ஷல் வங்கி 36 கௌரவமிக்க விருதுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட 31 வங்கிகளில் ஒன்றாகும்.

ADBஆனது எங்களின் மிகவும் கௌரவமிக்க பங்காளர்களில் ஒன்றாகும், மேலும், கொமர்ஷல் வங்கியை இலங்கையின் மிகப்பாரிய வர்த்தக வசதியாளர்களில் ஒன்றாக மாற்றுவதற்கு ADB வழங்கிய பங்களிப்பை நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம்' என வங்கியின் உதவி பொது முகாமையாளர் - பெருநிறுவன வங்கி பி.ஏ.எச்.எஸ்.ப்ரீனா தெரிவித்தார். 'கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இருவரையும் வர்த்தகம் தொடர்பான அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் நுட்பங்கள் மற்றும் கருவிகளை ADB எங்களுக்கு வழங்குகிறது, இதன் மூலம் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்யும் வர்த்தகங்களை ஆதரிக்கிறது. இந்த விருது இந்த துறையில் எங்கள் உறவின் வெற்றியை வெளிப்படுத்துகிறது.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகப் பெரிய தனியார்த் துறை வங்கி மற்றும் உலகின் சிறந்த 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும். கொமர்ஷல் வங்கி திறன்மிகு முறையில் அமையப்பெற்ற கிளை வலையமைப்புக்கள் மற்றும் 974 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது. மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது.

## ஹேமாஸ் மற்றும் SLIIT இணைந்து

# இலங்கையில் இணை ஸ்தாபனத்தை நிறுவுகிறது

நாட்டின் சுகாதார பராமரிப்பு கல்வியை சர்வதேச நியமங்களுக்கு கொண்டு செல்லும் நோக்குடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்துடன் (SLIIT) இணைந்த கல்வி ஸ்தாபனத்தை நிறுவ ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி முன்வந்துள்ளது. புத்தாக்கமான தாதியியல் மற்றும் இணைந்த சுகாதார பராமரிப்பு கல்வியை SLIIT-HEMAS Allied Health Sciences Institute (SHAHSI) எனும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பினூடாக பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் புதிதாக ஆட்சேர்ப்புக்கு முன்வந்துள்ள இந்த நிறுவனத்தில் 300க்கும் அதிகமான மாணவர்கள் இணைய முன்வந்துள்ளதுடன், மேலும் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர்.

தனியார் சுகாதார பராமரிப்பு வழங்கலில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் கொண்டுள்ள ஆழமான அனுபவத்துடன், SLIIT இன் புகழ்பெற்ற தரமான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கான கீர்த்தி நாமத்துடன் அமைந்த இந்த பங்காண்மையினூடாக, சர்வதேச ரீதியில் தொழில்புரியக்கூடிய இணைந்த சுகாதார பராமரிப்பு நிபுணர்களுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான பரிபூரண கற்கைகளை வழங்குகின்றது. நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் காணப்படும் திறன் படைத்த சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முக்கிய படியாக இந்த கைகோர்ப்பு அமைந்திருக்கும்.

தாதியர் மற்றும் சுகாதார பராமரிப்பு நிபுணர்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் பங்காண்மையினூடாக துரித கல்வி வழங்கப்படவுள்ளதுடன், முன்னணி விரிவுரையாளர்கள் மற்றும் நிபுணர்களை இணைத்து மாணவர்களுக்கு கல்வியறிவூட்டவும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தினூடாக வழமையான கல்விசார் கைகோர்ப்புகளுக்கு அப்பால் சென்று, தனது பரிபூரண தொழிற்துறை வெளிப்படுத்தல் மற்றும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும். தற்போதைய கற்கைகள், அவுஸ்திரேலியாவின் Deakin University மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் Liverpool John Moores University ஆகியவற்றுடன் இணைந்ததாக அமைந்திருக்கும். மேலும், தாதியியல் கற்கைகள்மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) NVQ நிலை 6 சான்றிதழை வழங்குவதாக அமைந்திருக்கும்.

இலங்கையின் சுகாதார பராமரிப்புத் துறையில் பெருமளவு புத்திஜீவிகளின் வெளியேற்றம் காரணமாக, அடுத்த தலைமுறை சுகாதார பராமரிப்பு நிபுணர்களை தயார்ப்படுத்துவதற்கு ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. தனது மூலோபாய திட்டங்களின் அங்கமாக, மனித மூலதனத்தில் இந்த முதலீடு என்பது நாட்டின் சுகாதார பராமரிப்பு பணியாளர்களை வலிமைப்படுத்துவதுடன், தொழிற்துறைக்கு நிலைபேறான எதிர்காலத்தை உறுதி செய்வதாக அமைந்திருக்கும்.

சுகாதார பராமரிப்புத் துறை என்பது திறன் படைத்த பணியாளர்களுக்கு சர்வதேச ரீதியில் பற்றாக்குறைக்கு முகங்கொடுத்துள்ளது. உள்நாட்டில் தனியார் துறையின் தேவைப்பாட்டில் வருடாந்தம் 1,000 முதல் 2,000 தாதியருக்கு பற்றாக்குறை காணப்படும் நிலையில், சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் மற்றும் SLIIT ஆகியன பிரத்தியேகமான நிலையில் தம்மை நிலைநிறுத்தியுள்ளன. வத்தளை மற்றும் தலவத்துகொட பகுதிகளில் இரண்டு நவீன வசதிகள் படைத்த




வைத்தியசாலைகளை கொண்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் 43 கம்பனி உரிமையாண்மையில் இயங்கும் மருத்துவ ஆய்வுகூடங்களையும் கொண்டுள்ள ஹேமாஸ், இலங்கையின் சுகாதார பராமரிப்பு துறைக்கான முக்கியத்துவம் வாய்ந்த பங்காளராக திகழ்கின்றது. ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் மொரிசன் ஆகியன மருந்தாக்கல் துறையில் முன்னோடிகளாக திகழ்வதுடன், ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் பிரதான விநியோகத்தராகவும், இலங்கையில் முதலாவதும் பாரியதுமான பொது வாய்மூல திண்ம மற்றும் திரவ மருந்துப் பொருட்களின் உற்பத்தி நிறுவனமாகவும் மொரிசன்ஸ் திகழ்கின்றது.

அதுபோன்று, ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தரப்புடன் இணைந்து பாடவிதானங்களை வடிவமைப்பதில் SLIIT கொண்டுள்ள வினைத்திறனானது, சுகாதார பராமரிப்பு விஞ்ஞானங்களில் கற்கைகளை மேம்படுத்துவதில் சிறந்த பங்காளராக திகழச் செய்துள்ளது. புகழ்பெற்ற தனியார் பல்கலைக்கழகமாக SLIIT இன் 25 வருட கால வெற்றிகரமான செயற்பாடு என்பது, 25,000க்கும் அதிகமான மாணவர்களை தன்வசம் கொண்டுள்ளது. Curtin, Deakin மற்றும் லிவர்பூல் John Moores University போன்ற சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் நீண்ட காலமாக பங்காண்மைகளையும் பேணுகின்றது.

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி குழும பணிப்பாளர் மற்றும் சுகாதார பராமரிப்பு துறை தவிசாளர் முர்தஸா ஈசுபாலி கருத்துத் தெரிவிக்கையில், "ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸினூடாக அர்ப்பணிப்பான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட தொழில் வாய்ப்புகள் போன்றன வழங்கப்படும். SLIIT இன் கல்விசார் ஆற்றல்களுடன் எமது நிபுணத்துவத்தை இணைத்து, உலகின் சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கு தங்கியிருக்கக்கூடிய சுகாதார பராமரிப்பு நிபுணர்களை வழங்கக்கூடியதாக இருக்கும். அதனூடாக சிறந்த சுகாதார பராமரிப்பை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்" என்றார்.

SLIIT இன் உப வேந்தர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் லலித் கமகே கருத்துத் தெரிவிக்கையில், "ஹேமாஸ் உடன் கைகோர்த்து இந்த நிகழ்ச்சிகளை சாத்தியமாக்கியுள்ளமையையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். பல இலக்குகளை எய்தும் எமது நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. சுகாதார பணியாளர்களுக்கான உறுதியான கட்டமைப்பை கொண்டிருக்க வேண்டிய எமது தேவையை நிவர்த்தி செய்வது மாத்திரமன்றி, கல்வி மற்றும் மூலோபாய தொழிற்துறை கைகோர்ப்பினூடாக எமது தேசத்தின் நலனுக்கு பங்களிப்பு வழங்குவதையும் வெளிப்படுத்தும். அதற்காக நாம் முயற்சிகளையும் கைகோர்ப்புகளையும் முன்னெடுத்துச் செல்வதற்காக முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம்" என்றார்.



## வியாபாரிகள்

தெருவிற்குத் தெரு
அவசர சமூக சேவையாளர்கள்
முளைத்துக் கிடக்கிறார்கள்.
நீயா நானா என போட்டிபோட்டு
நலன் விசாரித்து
உரிமைகளை பெற்றுத் தருகிறோம் என்கிறார்கள்...

ஒருவரை ஒருவர்
குற்றம் சுமத்தியும்
குடில்களில் வாழ்ந்த வரலாறு சொல்லியும்
அங்கும் இங்கும் அவசரமாக
காரியாலயங்கள் திறந்து
கும்மாளம் போடுகிறார்கள்...


முட்டாசுக்கடை வியாபாரி
சுவை பார்க்கதரும் இனிப்பாய்
அரிசி பைகளும் உலர் உணவுகளும்
வறுமைக்கோட்டு பட்டியல் தயாரித்து
வழங்கி புகைப்படம் எடுக்கிறார்கள்...

எங்கள் உரிமை
எங்கள் கடமைஎன்று
ஏதோ எல்லாம் கதைக்கிறார்கள்
சமய தலங்களுக்கு காசும்
விளையாட்டு கழகங்களுக்கு
பொருட்களும்
வாரி வழங்குகிறார்கள்...

கார்களும்
வெள்ளை ஆடைகளும்
ஓய்வில்லாமல்
அவர்களுடன் ஒட்டியே கிடக்கின்றன
பாவம் பாவம் அவர்கள்
எங்களை ஏமாற்றுகிறார்கள்
நாங்கள் அவர்களை ஏமாற்றுகிறோம்...

இப்படித்தான் இத்தனை வருடங்களும்
கடந்து முடிந்திருக்கின்றன
இதுதான் எங்கள் நாட்டு அரசியல்.

– காரையன் கதன்



## தீராதிந்த தாகம்

பெருக்கபெருக்க போதவில்லை
சுருக்கமனமோ எண்ணவில்லை
பற்றுமேல் பற்றுவைத்து
பாதிகாலம் ஓடி களைத்து
தாலாட்டு வயது தள்ளாடும் வரையில்
சேர்த்துசேர்த்து அபோதாமாலே
மாண்டும் வரையில் நிறைத்து பதுக்கி
தனியவில்லையே தாகம்
பொன் பொருள் மேல்
மனிதன் கொண்டமோகம்..!

விதைக்க வீடுதந்து
விதைக்கும் வீடுதந்து
விளைந்து வீடாய் வந்து
அடர்ந்த காடாய் நின்று
படர்ந்து வளியும் தந்து
கூடி நிழலும் தந்து
இருக்க இடம் தந்து
படுக்க இடம் பகிர்ந்து
குடில் அமைத்தும்
மனை உயர்ந்தும்
தனியவில்லையே தாகம்
மண் மரம் மேல் மனிதன்
கொண்ட மோகம்..!

உழைத்த பணத்தை
கரைத்து குடித்து
உருவான மலரை உருக்குலைத்து
பருக வேண்டி பணம் திருட்டு
அகப்பட்டால் பொய் புரட்டு
சுகம் வேண்டி உயிர் பறிப்பு
மலராத மொட்டுக்களுக்கும் துர் இறப்பு
விலை குறித்த அங்கத்திற்கு அடிமை
விலைமதிப்பில்லா மங்கைக்கு பாலியல் கொடுமை
தனியவில்லையே தாகம்
மது மாதுமேல் மனிதன் கொண்டமோகம்..!

கருவறைக்குள் தோன்றி கல்லறைக்குள் போகும்
நம் தேகம் கூட நமக்கு சொந்தமில்லை
ஐம்புலன் அடங்காமல்
தாகமனைத்தும் தீருவதுமில்லை..!

அன்பெனும் தாகத்தை அறியாமல்
நல்லபண்பெனும் தாகத்தில் பருகாமல்
அளவுக்கு அதிகமான ஆசையில் மோகித்தால்
அடங்காது என்றுமே பேராசையெனும் மனிததாகம்!

– சுவஸ்திகா ராஜ்பிரகாஷ்






## காமம்

இரவி
இறங்குவதற்குள்
ஏற்றப்பட்ட
விளக்கில்
இப்போது
உருக்கெண்ணை
கலப்படம்...
நாமத்துக்கு
நல்லெண்ணை
தூபத்துக்கு
துர் நாற்றம்...
கொள்ளிவாய்
பேய்களின்
கூட்டத்தின் நடுவில்
தனித்தனியாக
மீட்டிக்கொண்டலைந்தன
மின்மினிகள்...
இரவு வல்லவன்
வாசலில்
காவல் இருந்தது
வால் மிளிர்ந்த
பறவை...
ஆண்டாண்டு காலமாக
அடவிக்கு அருகில்
இருப்பவன்
மானுக்கு அடைக்கலம்
கொடுத்து
சிங்கத்தை
அரசனாக்கிக்
கொண்டிருக்கிறான்...
கலையை
வேட்டையாடுவது
காமத்தில் சிக்கல்
என்பதை
எனக்கு நானே
எந்தமொழியில்
சொல்லிக் கொள்வது...

– இரவிகாந்தன்
திருகோணமலை





## பொன்னான நிமிடங்கள்...

இன்னும் நினைவில் உள்ளது
ஏதோ என்னைக் கடந்தவை
சில மறந்தது ஏனோ?
சிறுபருவச் சித்திரங்களை
மீட்டுகிறேன் திரும்பவும் நடந்ததை
அது பொன்னான நிமிடங்களே
பேசிய முதல் வார்த்தை
மண்ணில் தவழ்ந்த நாட்கள்
தொட்டிலை நனைத்த அழுகைகள்
எழுந்து நடந்த முற்றம்
தலையான மகனென தந்தையார்
என்னில் கொண்டபூரிப்பு
அன்னம் ஊட்டிய பொற் கரங்களால்
அணைத்த தாய்மையின் பெருமிதம்
அறிவுரை மீறிய செயல்களால்
குறும்புசெய்யும் பிள்ளையிது
கவனம் கொள்ளுதல் நன்று
இது உறவினர் வேண்டுதல்
கவலை எதுவும் இன்றியே
பாம்பைப் பிடிக்கும் பருவம்
வண்ணம் நிறைந்த உடைகள்
நிதமும் மேனியில் சூடி
விளையும் பயிராய் வீட்டிலே
விண்மீனாய் சிரித்த காலங்கள்...

– சம்பூர் சமரன்



# ‘நீண்ட பயணம்’



தங்கராசா விதுஷன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

‘நீண்ட பயணம்’ எனும் நாவலானது யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய ஒரு நாவலாகக் காணப்படுகின்றது. இந்த நாவலின் உடைய படைப்பாளியாகக் கருதப்படுகின்ற செ.கணேசலிங்கன் பல்வேறுபட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார் .

இதனால் இவர் ஒரு புதிய படைப்பாளியாகக் காணப்படவில்லை இருப்பினும் இதுவே இவருடைய முதலாவது நாவலாகக் காணப்படுகின்றது.

நீண்ட பயணம் எனும் நாவலானதே யாழ்ப்பாணத்தில் காலம் காலமாக நிலவி வருகின்ற சாதி அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதாகவே நாவல் அமைந்திருப்பதைக் காணலாம் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஐந்து பிரதான சாதியினர் காணப்படுகின்றனர் பிராமணர் வேலாளர், பள்ளர் செம்பாட்டுப் பள்ளர் போன்ற பல்வேறு சாதியினர் காணப்படுகின்றனர் இவர்களில் பிராமணர் வேளார்கள் போன்றவர்கள் உயர்ந்த சாதியினராகக் கருதப்படுகின்றனர். அத்துடன், பள்ளர், பறையர் போன்றவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினராகக் கருதப்படுகின்றனர்.

பள்ளர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினராக இருக்கின்ற அதேவேளை, செம்பாட்டுப் பள்ளர் அவர்களை விடத் தாழ்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற உயர் சாதி, தாழ் சாதி என இரு வகைப்பட்ட சாதியர்களுக்குள் உயர்ந்த சாதியினர், தாழ்ந்த சாதியினராகக் கருதப்படுகின்ற பள்ளர் பறையர் செம்பாட்டுப் பள்ளர் ஆகியவர்களை இழிவாகக் கருதுவதும் அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதும் அவர்களுக்கு எந்த விதமான உரிமைகளும் வழங்கப்படாமை போன்ற பல்வேறு விடயங்களை நாவலாசிரியர் இந்நாவலின் ஊடாக எடுத்துக்காட்டுகின்றார்.

தாழ்ந்த சாதியினருக்கு எதிராக நடைபெறுகின்ற அடக்குமுறைகள் கொடுமைகள் அநீதிகளுக்குக் குரல் கொடுக்கும் வகையிலே நாவலின் கதையை நகர்த்திச் செல்கின்றார் கதாசிரியர். எனவே, இங்குத் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நடைபெறும் கொடுமைகளையும் அதற்கு எதிரான நடவடிக்கைகளையும் கதையின் ஊடாக விரிவாக நோக்கலாம்.

இக்கதையிலேயே பிரதான பாத்திரங்களாகச் செல்லதுறை, மாதவன், வள்ளி சரஸ்வதி, போன்றவர்களும் நாகி, கதிராசி, சுந்தரம் போன்ற பல்வேறு துணை பாத்திரம் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

அந்த வகையில், இந்நாவலில் குறிப்பிடப்படுகின்ற தாழ்ந்த சாதியினருக்கு எதிரான அடக்கு முறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ள முடியும். தாழ்த்தப்பட்ட சாதியினர் என கருதப்படுபவர்கள் தாங்கள்

தங்களுக்கு விரும்பியவாறு பெயர் சூட்டிக் கொள்ள முடியாமல் காணப்பட்டது. குறிப்பாக இவர்களுடைய பெயர்களைப் பதிவாளர் பதிகின்ற போது சுப்பிரமணியன் என்ற பெயருடைய நபரின் பெயர் சுப்பர் என்று அங்குப் பதிவிடப்படுகின்றது.

இதே போன்று கந்தசாமி கந்தன் என்றும் உயர்சாதியினர் பதிவிடுகின்ற பெயர்களை அவர்கள் தங்களுக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

இதேபோன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நடத்தப்படுகின்ற கொடுமைகளில் முக்கியமாகக் கிராமத்தில் காணப்படுகின்ற அனைத்து பாடசாலைகளிலும் இவர்களால் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஒன்று

காணப்பட்டது .குறிப்பாக மிஷன் பாடசாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதே போன்று தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆடை ஆபரணங்கள் அணிதல், போக்குவரத்து செய்தல், கடைகளில் உணவு உண்ணல் என்பவற்றில் உயர்

சாதியினர் கட்டுப்பாடு ஒன்றை விதித்திருந்தார்கள். எடுத்துக்காட்டாகத் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பெண்கள் தாவணி அணியக்கூடாது அதேபோன்ற இவர்கள் தேநீர்க் கடைகளில் தேநீர் அருந்த முடியாது போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர்.

இது மட்டுமல்லாது, கோயில்களுக்கு உள்ளே சென்று வழிபடவோ, சுவாமி வருகின்றபோது நிறைகுடம் எடுத்து தண்ணீர் ஊற்றவும் முடியாது.

தாழ்ந்த சாதியினருக்கு அதாவது பஞ்சமருக்கு என்று தனியான இடம் ஒதுக்கப்படுகின்றது. பஞ்சமருக்குக் கயிறுகளால் கட்டப்பட்ட இடங்களில் நின்றே அவர்கள் வழிபடவோ அல்லது வானவேடிக்கை, சின்ன மேளம் போன்ற நிகழ்வுகளைப் பார்க்கவோ முடியும்.

கயிறுகளுக்கு அப்பால் சென்றால் அவர்கள் தாக்கப்படுவதனையும் கதையின் ஊடாக காணப்படக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக கோயில் சப்பரிதத் திருவிழாவின்போது, பஞ்சமர்களுக்குத் தனியிடம் ஒதுக்கப்பட்டிருந்த வேளையில் நல்லான் என்ற சிறுவன் நித்திரை தூக்கத்தில் கயிற்றைப் பிடித்தபடி கயிற்றிற்கு வெளியே சென்றுவிட்டான்.

வேளாளர்கள் “பள்ளப்பிள்ளை படுத்திருப்பதைப் பார்...” “உள்ளுக்குள் வந்து கிடக்கிறான் பிள்ளையார் வாசல் பக்கம் கால் நீட்ட என்ன துணிச்சல்...” என்று அவர்கள் குமிறி கோயிலுக்குப் பின்னால் அந்த நல்லான் என்ற சிறுவனை அழைத்துச் சென்று அங்கு அவன் தாக்கப்பட்டதையும் காணலாம்.

இச்சிறுவன் தாக்கப்பட்டதையும் பின்னர் அவன் இறந்து போனதுமே வேளாளரின் அநீதிகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்குக் காரணமாய் அமைந்தது.

இது மட்டுமல்லாது, உயர் சாதியினராய் நிகழ்த்தப்படுகின்ற கொடுமைகளையும் அவர்களின் அநீதிகளையும் அவர்கள் பணத்தினாலும் பதவியினாலும் மற்றும் செல்வாக்கினாலும் குற்றம் செய்தவர்கள் தப்பித்துக் கொண்டதனையும் கதையின் ஊடாக நாம் நோக்கலாம். குறிப்பாக நல்லான் தொடர்பான வழக்கு, பூமணியை காதலித்த மாணிக்கனை அவளது தாயும் ஐயர் பெண்களும் கொன்ற போது சாட்சியின்மையினால் வழக்கு தள்ளிப் போடப்பட்டதனையும் காணலாம்.

இவ்வாறு உயர் சாதியினரின் குற்றங்கள் ஒவ்வொன்றும் மூடி மறைக்கப்பட்டன. இதனை விடத் தாழ்த்தப்பட்ட சாதியினர் சட்டவிரோதமாகச் சாராயம் காய்ச்சுவதற்கும் தடை விதிக்கப்பட்டு இருந்தது. இதேபோன்று, பள்ளர்களின் குடிசைகளுக்கு தீ வைத்தார்கள் இதேபோன்று தாழ்த்தப்பட்டவர்களின் வேலைக்கு ஏற்ப ஊதியம் கிடைப்பதில்லை. மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஆண்களின் தொழிலாகச் சாவு மேளம் அடித்தல், சுடலைக்கருமம் செய்தல் போன்ற தொழில்கள் மாத்திரமே செய்ய வேண்டும் என கூறப்பட்டிருந்தது.

மேலும் மேலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிரான செயற்பாடுகளாக ஆண்கள் பறையடிக்கச் செல்கின்றபோது முழங்காலுக்குக் கீழே வேட்டிக் கட்டக்கூடாது, மற்றும் தோளிலே துண்டு போடக்கூடாது, அரையிலே கட்ட வேண்டும் என்ற விதிமுறைகளும் வேளாளர்களால் இவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது.

இதனை விட வேளாளர்களுடைய வீடுகளில் கிணறு வெட்டுவது தாழ்த்தப்பட்ட சாதியினருக்காகக் காணப்பட்டாலும் அவர்களுடைய கிணற்றுக்குள் சென்று தண்ணீர்

எடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஐம்பது குடும்பங்களுக்கு ஒரு கிணறு என்ற வகையிலேயே காணப்பட்டது.

இவ்வாறாகத் தாழ்ந்த சாதியினருக்கு பல்வேறுபட்ட கொடுமைகள் நிகழ்த்தப்பட்டதனை ஆசிரியர் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறான அடக்குமுறைகளுக்குக் குரல் கொடுத்தவர்களில் செல்லத்துரையின் பங்கு அளப்பரியதாகக் காணப்படுகின்றது.

கதையின் இறுதியில் உயர் சாதியினருக்கு எதிரான தேர்தலில் போட்டியிட்டுத் தாழ்ந்த சாதியினரே வெற்றி பெற்றனர். இதன் பின்னராக சில அடக்குமுறைகள் கைவிடப்பட்டன.

குறிப்பாக இவ்வெற்றியின் பின்னர் நல்லூர் கந்தசாமி கோயில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் திறந்து விடப்பட்டிருப்பதனை

நாவலின் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான சில அடக்குமுறைகள் கைவிடப்பட்டாலும் உயர் சாதியினர் என்ற வேறுபாடு முற்றாக அழிந்து விடமாட்டாது. என்பதனையும் இக்கட்டுரையின் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.


மற்றும் இந்த நாவலின் அடிப்படையில் சாதிக்குள் சாதி பார்க்கின்ற தன்மை காணப்படுவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. செல்லதுரையன் என்ற கதையினுடைய பிரதான பாத்திரம் செம்பாட்டுப் பகுதியில் உள்ள பள்ளர் குலத்தைச் சேர்ந்த பெண் ஒருவரைக் காதல் செய்கின்றான்.

இவனுடைய திருமண பேச்சை எடுக்கின்ற போது, அது செம்பாட்டுப் பள்ளி என்று கூறி இருந்தனர்.

இங்குச் சாதிக்குள் சாதி பார்க்கின்ற தன்மை காணப்படுவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மற்றும் இந்நாவலினுடைய மொழி நடையைப் பொறுத்தவரையில் இலக்கண வரம்பிற்குக் கட்டுப்படாத பிரதேச வழக்குச் சொற்கள் அதிகமாகக் கையாளப்பட்டிருப்பதனை காணலாம் எடுத்துக்காட்டாக “தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுதல்” போன்ற பழமொழிகள் இடம் பெற்றுள்ளது.

எனவே ஒட்டுமொத்தமாக இன்னாவலின் உடைய கதைக் கருவைத் தொகுத்து நோக்குகின்ற போது உயர் சாதியினர் என்று அழைக்கப்படும் வேளாளர்களால் தாழ் சாதியினரான பஞ்சமருக்கு நிகழ்த்தப்படுகின்ற கொடுமைகளும் அதற்கு எதிரான போராட்டங்களையும் எடுத்துக்காட்டுவதாவே இந்த நாவலின் கதைக்கரு அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் காலங் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் சாதி அடக்குமுறைகளுக்கு எதிரான குரல் கொடுக்கின்ற ஒன்றாகவே இந்நாவலின் கதைக்கரு அமைந்துள்ளது என்பதும் இதன் மூலம் தெளிவாகின்றது.






# நமது தேயிலை



கணேஸ்குமார் மதியந்தி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஜேம்ஸ் டெய்லர் என்றதும் எமக்கு ஞாபகம் வருவது இலங்கையில் தேயிலையை அறிமுகப்படுத்தியவர் என்பது தான்.

இவரைப்பற்றி விரிவாக அறிந்து கொள்ள வேண்டியது இந்த தலைமுறையினருக்கு மிக அவசியமானதொன்று.

பிரித்தானியரான ஜேம்ஸ் டெய்லர் 1835ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி இங்கிலாந்தில் பிறந்தார்.

1852ஆம் ஆண்டு இவர் இலங்கைக்கு வந்த போது கண்டி மாவட்டத்தின் லூல்கந்துர தோட்டத்தில் நிரந்தரமாகத்தங்கி விட்டார். தேயிலை தொழிற்றுறை மற்றும் தேயிலைச் செய்கை பற்றியும் அறிந்து கொள்வதற்காக இவர் 1866ஆம் ஆண்டு இந்தியாவுக்குப் பயணம் செய்து அங்குப் பல விடயங்களைக்கற்றார்.

பின்பு 1867ஆம் ஆண்டு நாடு திரும்பிய இவர் தான் கற்ற விடயங்களையே மூலதனமாகக்கொண்டு தான் வசித்த லூல்கந்துர தோட்டத்தில் 19 ஏக்கரில் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தார்.

அத்தோடு சிங்கோனாவையும் பயிரிட்டனர். இலங்கையில் முதன் முதலாகத் தேயிலை பயிரிடப்பட்ட இடமாக லூல்கந்துர தோட்டமே விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தில் லூல்கொண்டெரா என்றே அழைத்தனர்.




இலங்கையில் முக்கிய தேயிலை வளர்ப்பு பகுதிகள் ஆறு காணப்படுகின்றன. காலி, இரத்தினபுரி, நுவரெலியா மற்றும் தம்புள்ளை ஆகும். இலங்கையில் வளர்க்கப்படுவது கறுப்பு தேயிலையாகும். இது நல்ல நறுமணத்தைக் கொண்டிருப்பதோடு சிற்றஸ் அமிலத்தின் அதன் மணத்திற்கு ஒப்பானதாகும்.

தேயிலை சுவையூட்டிகள் கலந்தோ அல்லது கலக்கப்படாமலோ அருந்தப்படுகின்றது.

தேயிலை பல தோட்டங்களில் பல உயரங்களில் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் உயரத்துக்கமைய சுவையும் வேறுபடுகின்றன.

கண்டி 2,500க்கு மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை மொறவக்கோரளை 2,500 அடிக்கு குறைவான உயரமான பகுதியில் வளரும் தேயிலை ஊவா 2,800 மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை தம்புள்ளை மற்றும் டிக்கோயா 3,500க்கு மேல் உயரமாக வளரும் தேயிலை நுவரெலியா 6,000 அடிக்கு மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை என பயிரிடப்படும் முறைகள் காணப்படுகின்றன.

1872ஆம் ஆண்டு இங்கு அவர் ஒரு தேயிலை தொழிற்சாலையையும் ஆரம்பித்தார். தேயிலை தொழிற்றுறையை இலங்கையில் அபிவிருத்தி செய்யும் பொருட்டு அச்சந்தர்ப்பத்தில் இங்கு வந்த ஸ்கொட்லாந்து நாட்டவரான தோமஸ் லிப்டனிடம் இணைந்து தேயிலையை பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் கலந்துரையாடினார் டெய்லர்.

ஐக்கிய இராச்சியத்தின் கோடீஸ்வரராக விளங்கிய தோமஸ் லிப்டன் 1890ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குச் செல்லவிருந்த பயணத்தை இடை நிறுத்தி இலங்கை வந்தார். அதற்குக்காரணம் அப்போது இலங்கையின் தேயிலை உற்பத்தி பற்றி எழுந்த கதைகள் தான். டெய்லரை சந்தித்த தோமஸ் லிப்டன் அவரிடம் இலங்கைக்தேயிலையை வாங்கி பிரித்தானியாவில் விற்பனை செய்யச் சம்மதம் தெரிவித்தார்.

இதன் பிறகு டெய்லர் இலங்கையிலிருந்து தேயிலையை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இத்துறையை முன்னேற்றினார். 23 பவுண்ட்களில் ஆரம்பித்த இவரது தேயிலை ஏற்றுமதி 81 தொன்களாக அதிகரித்து 1890ஆம் ஆண்டின் இறுதியில் 22,900 தொன்களாக உச்சத்தைத் தொட்டது.

அதன் பின்னர் டெய்லர் ஹேவாஹெட்ட பிரதேசத்தின் காட்டுப்பகுதியைச் சுத்தப்படுத்தி 19 ஏக்கரில் தேயிலை விதைகள் மூலம் தேயிலை பயிரிட்டார். தனது அயராத முயற்சி காரணமாக 1875ஆம் ஆண்டு இலண்டனில் இடம்பெற்ற தேயிலை ஏல விற்பனையில் இலங்கைத் தேயிலையை இடம்பெறச்செய்தார்.

இலங்கையின் தேயிலைத் தொழிற்றுறை அசுர வேகத்தில் வளர்ச்சி கண்டது. பல தேயிலை கம்பனிகள் இதன் இலாபத்தை அனுபவிக்கத் தயாராகின.சிறிய தேயிலைத் தோட்டங்கள் பலதை இந்த கம்பனிகள் விலை கொடுத்து வாங்கின. டெய்லர் இருந்த லூல்கந்துர தோட்டமும் இதற்கு இரையானது. இலங்கையில்முதன் முதலாகத் தேயிலையைப் பயிரிட்டவர் என்ற பெருமைக்குரிய டெய்லர் மிகுந்த மனவேதனையுடன் லூல்கந்துர தோட்டத்தை விட்டு வெளியேறினார்.

தனது வாழ்நாளில் அரைவாசியை இலங்கையிலேயே கழித்தார். அதாவது, 57 வருடங்கள். 1892 ஆம் ஆண்டு உயிர் நீக்கும் வரை அவர் இலங்கை மண்ணை விட்டு நீங்கவில்லை.

லூல்கந்துர தோட்டத்தை விட்டு நீங்கிய ஜேம்ஸ் டெய்லர் வயிற்று உபாதை நோயால் பாதிக்கப்பட்டு அவ்வாண்டே காலமானார்.

அவரது உடல் கண்டி மகியாவ மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.அவரது கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் இவை;

*“In pious memory of James Taylor of Loolecondera Estate Ceylon, the pioneer of the cinchona and tea enterprise in this island, who died May 2, 1892, aged 57 years”*

ஜேம்ஸ் டெய்லர் இறந்து சரியாக ஒரு வருடம் கழித்து அதாவது 1893ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து சுமார் பத்து இலட்சம் தேயிலை பைக்கற்றுகள் லண்டனுக்குக் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டு அமெரிக்காவின் சிக்காக்கோவில் இடம்பெற்ற உலக சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

1867ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் 80 வீதமானவை பிரித்தானிய கம்பனிகள் வசம் இருந்தன.

1971ஆம் ஆண்டே இலங்கை அரசாங்கம் நிலவுரிமை சட்டத்தை அறிமுகப்படுத்திப் பல தேயிலைத் தோட்டங்களைத் தன்வசமாக்கியது. 1992ஆம் ஆண்டு ஜேம்ஸ் டெய்லர் இறந்து நூறாண்டுகள் நினைவு கூறப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் அப்போதைய பிரித்தானிய உயர்ஸ்தானிகராக இருந்த ஜோன் பீல்ட் கூறிய வார்த்தைகள் உண்மையில் அர்த்தம் வாய்ந்ததாகத்தான் அமைந்தது. இலங்கையின் மத்திய மலை நாட்டை செதுக்கியவர்களுள் பல தனிப்பட்ட நபர்களும் தொழிலாளர்களும் அடங்கலாம், ஆனால் மத்திய மலை நாட்டை அழகு படுத்தியதில் ஜேம்ஸ் டெய்லர் என்ற மனிதரின் பங்கு அளவு கடந்தது. தேயிலையைப் பயிரிட்டதன் மூலம் அவர் இதைச் செய்தார், இவ்வாறு அவர் கூறினார்.

*“It can be said of very few individuals that their labors have helped to shape the landscape of a country. But the beauty of the hill country as it now appears owes much to the inspiration of James Taylor, the man who introduced tea cultivation to Sri Lanka”*

ஜேம்ஸ் டெய்லர் வாழ்ந்த இடத்தில் அவ்வாண்டு நூதன சாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. இன்று தேயிலைத் தொழிற்றுறையில் உலகில் தனித்துவமிக்க நாடாக விளங்குகிறது இலங்கை. மேலும் தேசிய வருமானத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது. இத்தனைக்கும் காரணமான ஜேம்ஸ் டெய்லர் என்ற மனிதரை நாமும் ஞாபகப்படுத்திக்கொள்வது தான் நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன்.



# சக்தியின் 26ஆவது அகவை தினம்

1998 அக்டோபர் 20ஆம் திகதி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தனியார் தமிழ் தொலைக்காட்சி என்ற பெருமையைக் கொண்ட சக்தி தொலைக்காட்சி, கடந்த 26 ஆண்டுகளாகத் தமிழ் பேசும் சமூகத்திற்காக முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழ் பேசும் மக்களின் கலாசாரத்தைப் பாதுகாத்து வளர்ப்பதில் பெருமளவு பங்களிப்பு செய்துள்ளது.

## திறமைகளை ஊக்குவிக்கும் தேடல்

நிகழ்ச்சிகள் சக்தி தொலைக்காட்சி தன்னுடைய திறமைச் செயல்முறை நிகழ்ச்சிகளை வழிகாட்டியாகக் கொண்டு தமிழ் பேசும் பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல முன்னோடி நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளது. சக்தி சூப்பர் ஸ்டார் நிகழ்ச்சியை தொடர்ந்து, பாட்டுப் பாடவா, இளைய கானம், ரேடியோ சூப்பர்ஸ்டார், சூப்பர்ஸ்டார், ஜூனியர் சூப்பர் ஸ்டார், சக்தி இசை இல்லவரசர்கள், இசை மகா யுத்தம் மற்றும் சமீபத்தில் சக்தி கிரவுன் போன்ற நிகழ்ச்சிகள் நாட்டின் தமிழ் இசைத் தரத்தை உயர்த்தும் வகையில் பங்களிப்பு செய்து வருகின்றன. இதன் மூலம் இலங்கையின் தமிழ் இசைத்துறைக்கு பாரிய பங்களிப்பு செலுத்துவது மாத்திரமன்றி, இதுவரை அதிகமான இசைத் தொகுப்புகள் காணொலித்தொகுப்புகள் வெளியிட்ட பெருமையும் சக்தி தொலைக்காட்சிக்கே உரித்தானதாகும்.

'ஒ போடு' என ஆடல் கலையை நேசிக்கும் மக்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட ஆடல் நிகழ்ச்சி பின் நாட்களில் பாரம்பரிய ஆடல் செழுமையை உள்ளீர்த்து பாரம்பரிய போட்டி நிகழ்ச்சியாக 'திமிதகதா' எனும் பெயரில் ஒளிபரப்பப்பட்டது. அவை பின் நாட்களில் நாட்டினது அனைத்து பாகங்களும் இணைத்துக்கொள்ளும் நோக்கில் குழுப் போட்டி நிகழ்ச்சியாக 'Shakthi Classical Dance star' எனும் பெயரில் இரு பருவங்களாக நடைபெற்றது.

இலங்கை மக்களிடையேயான பேச்சு வன்மையைப் பலப்படுத்தும் முகமாக 'களம்' நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு அவை பத்து பருவங்களாக பாடசாலை மாணவர்களின் விவாதத் திறனை சமூகத்திற்கு அடையாளப்படுத்தும் நிகழ்ச்சியாக வியாபித்திருந்தது. பின்னர் தமிழ் செழுமையை அதிகம் உள்ளீர்க்கும் முகமாகத் தமிழ் பேராசான்களின் வழிநடத்தலில் 'சக்தி தமிழோசை' இரு பருவங்களாக விரிவடைந்தன.

மாணவர்களின் தகவலறிவு, சமயோசிதம் மற்றும் பேச்சுத்திறனை மேம்படுத்தும் நோக்கில் அதிக பொருட்செலவில் 'அறிவு', பஞ்சதந்திரம், 'The Debater', 'Econ Icon' போன்ற நிகழ்ச்சிகளும், பார்வையாளர்களை அறிவுடனும், அவதானத்துடனும் போட்டியிடவைத்து மிகப்பெரும் பணப்பரிசில்களை வழங்கி வெற்றியாளர்களாக ஆக்கும் மஹா லட்சாதிபதி, வெல்லலாம் வாங்க, 'Grand Master' போன்ற நிகழ்ச்சிகளையும் சக்தி தொலைக்காட்சி திட்டமிட்டு வழங்கியது.

இலங்கையின் தனித்துவம் மிளிர வேண்டும் என்ற நோக்கம் சக்தி தொலைக்காட்சிக்கு ஆரம்பத்திலிருந்து இருந்ததனால் இந்திய இலங்கை கூட்டுத்தயாரிப்பில் மறைந்த மாபெரும் நடிகை மனோரம்மா மற்றும் நம் நாட்டடின் மறைந்த கலை ஜாம்பவான்களான மரிக்கார் ராமதாஸ், உபாலி செல்வசேகரன் மற்றும் கலைஞர் சந்திரசேகரன் போன்றோரும் பங்குகொண்ட வா வாத்யாரே வா தொலைக்காட்சி நாடகத்துடன் சக்தியின் நம்மவர் படைப்பின் ஒளிபரப்பு ஆரம்பமாகி பின்னர் மீண்டும் மீண்டும் கோமாளிகள், நிஜத்தின் நிழல், சின்னதிரை, சக்தி திரைக்கூடம் என இன்று வரையில் பல தொலைக்காட்சி நாடகங்களும் வெள்ளித்திரை படங்களும் தயாரிக்கப்பட்டுவருகின்றன. இதன் மூலம் நடிக நடிகைகள் மாத்திரமன்றி, திரைபடைப்புத்துறையின் பல திறமையானவர்களும் இனங்காணப்பட்டு இன்றுவரையிலும் தம் துறையில் பங்குகொள்கின்றனர்.

சமய ஒற்றுமைக்கு ஊக்கமளிக்கும் விதமாக, சக்தி தொலைக்காட்சி பல சமய நிகழ்ச்சிகளை நேரலையாக ஒளிபரப்பி வருகிறது. அதில் பல இஸ்லாமியப் போட்டி நிகழ்ச்சிகள் ரமழான் காலங்களில் ஒளிபரப்பப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்த ஆழமான விவரங்களை வழங்கும் மின்னல் சமர், எதிரொலி, புதிய பாதை போன்ற நிகழ்ச்சிகளின் வழியாகத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் விழிப்புணர்வுக்கு பாரிய பங்களிப்பையும் சக்தி தொலைக்காட்சி வழங்குகிறது.


## மனிதநேய உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரணம்

சக்தி தொலைக்காட்சி வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம், சுனாமி நிவாரணம் போன்ற பேரிடர் காலங்களில் ஆற்றிய உதவிகள் இன்றும் மக்களினால் நினைவுகூரப்படுவது குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் தொடரப்படும் 'கம்மத்த' எனும் மனித நேய செயற்திட்டம் பாதிக்கப்பட்ட மக்களின் துயரறிந்து செயற்படும் மிக உத்தமமான செயற்திட்டம் என்ற சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

இவை தவிர்த்து சமூக விழுமியங்களுக்காய் அதிகம் சேவையாற்றும் மனிதர்களை இனங்கண்டு கௌரவப்படுத்தும் பல விருது வழகும் செயற்திட்டங்களையும் சக்தி தொலைக்காட்சியானது வழி நடத்தி வந்துகொண்டுள்ளது.

எதிர்காலத்திற்கான உறுதிமொழி

சக்தி தொலைக்காட்சி தனது 26ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த நேரத்தில், இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்காக அவர்களின் கலாசாரத்தைப் பாதுகாக்கும் புதிய முயற்சிகளைப் பூகோள மாற்றங்களை உள்வாங்கித் தொடர்ந்து முன்னெடுக்க மீண்டும் உறுதிப்படுத்துகிறது.



# இராஜராஜப் பெரும்பள்ளி



சயனிகா ஸ்ரீ,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

திருகோணமலை நகரத்தில் இருந்து வவுனியா செல்லும் பாதையில் கன்னியா வெந்நீரூற்றைத் தாண்டி வரும் பொழுது வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பிரதேசமாக இராஜராஜப்பெரும்பள்ளி / வெல்கம் விகாரை அமைந்துள்ளது இது தொடர்பில், ஓய்வு பெற்ற அதிபரான எழுத்தாளர் திருமலை நவம் அவர்களுடன் கலந்துரையாடக் கிடைத்தது. அதனைக் கேள்வி பதிலாகத் தருகின்றோம்.



**கேள்வி : தமிழ் பௌத்தர்களுடனும் தமிழர்களுக்கும் இதில் கணிசமான பங்கு இருக்கின்றது, என்பது எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகின்றது?**

பதில் - வெல்கம் விகாரை என தற்போது இவ்விடம் அழைக்கப்பட்டாலும் இதன் பண்டைய பெயர் ஒரு தூய தமிழ்ப் பெயராகும். இது பண்டைய காலத்தில் வெல்காமம், வெல்கம் வேரம் எனவும் சோழர் காலத்தில் இராஜராஜ பெரும்பள்ளி எனவும் அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதும், இது தமிழ் பௌத்தருக்குச் சொந்தமான தளமாக இருந்துள்ளது என்பது, அவர்களின் முக்கிய தளமாக இராஜராஜ பெரும்பள்ளி எனும் வெல்கம் வேரம் விளங்கியுள்ளது என்பதும், திருகோணமலை பிராந்தியத்திலே பொலநறுவைக் காலத்தில் வாழ்ந்த தமிழரில் கணிசமான தொகையினர் பௌத்தர்கள் என்பதும், தமிழ்நாட்டில் தமிழ் பௌத்தரின் தளங்கள் அழிந்து போயுள்ள நிலையில் இலங்கையில் தமிழ் பௌத்தரின் அடையாளச் சின்னமாக இடுப்பாடுகளுடன் ஆவது எஞ்சி இருக்கும் தளமாக இது விளங்குகின்றது.

**கேள்வி: இத்தளத்திற்கும் சோழர்களுக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது ?**

பதில் - இத்தளத்திலிருந்து இதற்குத் தானம் வழங்கியவர்கள் அனைவரும் தமிழ் பௌத்தர்கள். இத்தமிழ் பௌத்தரின் பள்ளியைக் கட்டியவர்களும் தமிழர்களே. அதாவது சோழர்கள். இலங்கையைச் சோழர்கள் ஆட்சி செய்த காலத்தில் இராஜராஜ சோழனின் பெயர் சூட்டப்பட்டு சீரும் சிறப்புடனும் விளங்கியது. இங்குள்ள சோழர் கால கல்வெட்டுகளில் தானம் செய்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.



**கேள்வி - இத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் பின்னணி எத்தகையது?**

பதில் - 1929ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் இப்பகுதிக்கு வந்து ஆய்வுகள் மேற்கொண்ட போது இது தமிழ் பௌத்தருக்குரிய தளம் என்பதை சிங்கள பௌத்தர்கள் அறிந்து கொண்டனர்.

இதன் காரணமாகவே இத்தளத்தைத் தமிழர்கள் கைப்பற்றி விடுவார்கள் எனும் அச்சத்தில் சில அரசியல் சக்திகளின் ஆதரவுடன் தொல்பொருள் திணைக்களம் தடுத்தும், இங்கு அவசர அவசரமாகப் புதிதாக ஒரு பௌத்த விகாரை அமைத்து அங்கு தங்கி விட்டனர்.

இது ஒரே ஒரு தமிழ் பௌத்தத்திற்குரிய இடம் என்பதாலும், இங்கு அதற்கான வலுவான ஆதாரங்கள் இருப்பதாலும், அதனால் இவ்விடத்தைச் சரியான முறையில் அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் தொல்பொருள் திணைக்களத்துக்கு இருந்தும் புதிய விகாரையால் அப்பணி தடுக்கப்பட்டன.

இறுதியில் புதிய விகாரையை சேர்ந்தவர்களை அங்கிருந்து அகற்ற மாட்டோம், என தொல்பொருளியல் திணைக்களம் உறுதி அளித்ததன் பின்பே அகழ்வாராய்ச்சி செய்ய இடம் அளிக்கப்பட்டது. எனவே தான் வெல்கம் விகாரையில் 1929 ஆம் ஆண்டு அகழ்வாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டு, பின்பு நிறுத்தப்பட்டு சுமார் 25 ஆண்டுகளின் பின்பு 1953 மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அகழ்வாராய்ச்சி செய்வதற்கு இவ்வளவு நீண்ட கால இடைவெளியை இலங்கையில் வேறு எந்த தளத்திற்கும் தொல்லியல் திணைக்களம் எடுத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி : எதனடிப்படையில் இத்தளம் தமிழ் பௌத்த பள்ளி என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது?**

பதில் - பௌத்தர்கள் இதனை வில்கம் விகாரை என அழைத்தாலும் தமிழர்கள் இதனை நாதனார் கோயில் என அழைக்கின்றனர். கோயில் போன்ற அமைப்புகளும் அழிபாடுகளும், திராவிட கட்டடக்கலை மரபுகளையும் உள்ளடக்கியதாக இவ்விடம் காணப்படுகின்றது. இங்கு பல தமிழ் எழுத்துக்கள் குறிக்கப்பட்ட கல்வெட்டுகள் கவனிப்பாரின்றி ஆங்காங்கே கிடைக்கின்றன.

**கேள்வி : "தமிழ் பௌத்தத்தின் மீள் கட்டுமானத்தின் தேவை மிகவும் பாரதூரமானது" இதனை நீங்கள் எவ்வாறு தெளிவு படுத்துகின்றீர்கள்?**

பதில் - புத்த பெருமானின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் ஞானத்தால் அறிந்தவற்றையும் போதனைகளாகக் கொண்டதே பௌத்த மதமாகும். இந்த பௌத்த மதத்தைப் பின்பற்றுவதற்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இனங்கள் குறித்த வரையறை விதிக்கப்படவில்லை.

பௌத்த மதம் சிங்களவர்களுக்குப் போன்றே தமிழர்களுக்கும் சொந்தமானது. அதன் தத்துவங்களையும் போதனைகளையும் கடைபிடிப்பதற்கு எந்த ஒரு இனத்திற்கும் விதிவிலக்கு செய்யப்படவில்லை.

அந்த வகையில், இலங்கைத் தமிழர்களுக்குப் பௌத்த ஏன் அந்நியமாகிப் போனது? தமிழ் பௌத்தம் ஏன் அழிந்தது? இந்தக் கேள்விகளுக்கான பதில் தமிழ் ஒருவரிடம் இருந்து தான் வரவேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு தமிழரை நாம் காண முடியவில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பௌத்தம் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டது. தமிழ் பௌத்தத்தின் மேல் கட்டுமானத்தின் தேவை மிகவும் பாரதூரமானது என்பது இதன் மூலம் புலப்படும்.

**கேள்வி : தமிழ் பௌத்தம் குறித்து உங்களது கருத்து என்ன?**

பதில் - தமிழ் பௌத்தர்கள் வடக்குக் கிழக்கில் பரந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். இவர்களது வழித்தோன்றலில் வந்த ஒரு சிலரை தற்போது இங்கு காண முடிந்தாலும் இலங்கையில் தற்போது துரதிஷ்டமாக தமிழ் பௌத்தர்கள் இல்லை என்றே கூற வேண்டும். தமிழர்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றி வந்த போதும் காலத்தின் போக்கிலேயே இவ்வாறான தமிழ் பௌத்தர்கள் மறைந்து விட்டார்கள் என பல ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சாதாரண குடிமகனைச் சென்றடைந்தால் மாத்திரமே இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை முழுமையாக அனுபவிக்க முடியும்.

வரலாற்றை அலசி பார்த்தால் தமிழர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் மிகவும் நெருங்கிய தொடர்புகள் இருந்தமையும், பௌத்த மதத்தை வளர்ப்பதற்கும் அதன் போதனைகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கும், தமிழர்கள்தான் பெரிதும் பாடுபட்டுள்ளார்கள் என்பதும் தெரியும். இதற்குப் பெரிய ஆதாரமே வெல்கம் விகாரை எனப்படும் இராஜராஜ பெரும்பள்ளி.





நைஜீரியா

எரிபொருள் கொள்கலன் விபத்து:

# 140 பேர் பலி; 50 பேர் காயம்

நைஜீரியாவின் ஜிகாவா பகுதியில் எரிபொருள் ஏற்றிச் சென்ற கொள்கலன் ஒன்று விபத்துக்குள்ளானதில், 140 பேர் உயிரிழந்துள்ளதுடன், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

புதன்கிழமை (16), நெடுஞ்சாலையில் செல்லும்போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எரிபொருள் கொள்கலன் திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தால் கொள்கலனில் இருந்த பெற்றோல் கசிந்து வெளியேறியது. அங்கிருந்த மக்கள் கசிந்த எரிபொருளை சேகரிக்க விரைந்துள்ளனர்.

அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடிய நிலையில், கொள்கலன் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதில் 140 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 50க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவில் சரக்கு ரயில் போக்குவரத்து மிகப்பெரிய தோல்வி அடைந்ததால், வீதி மார்க்கமாக பௌசர்களில் எரிபொருள்கள் எடுத்துச்செல்லப்படுகின்றன. இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# 46 ஓட்டங்களுக்குள் சுருண்டது இந்தியா

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் 46 ஓட்டங்களுக்குள் இந்தியா சுருண்டது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பெங்களூருவில் புதன்கிழமை (16) ஆரம்பிக்கவிருந்த இப்போட்டியின் முதல் நாளில் மழை காரணமாக ஆட்டம் நடைபெறாத நிலையில் நாணயச் சுழற்சியில் நேற்று வென்ற இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

இந்திய அணியில் 100 சதவீதம் உடற்றகுதியில்லாத ஷுப்மன் கில்லை சஃப்ராஸ் கான் பிரதியிட்டதுடன், ஆகாஷ் டீப் இல்லாமல் குல்தீப் யாதவ் மூன்றாவது சுழற்பந்துவீச்சாளராக இடம்பெற்றார்.

நியூசிலாந்து அணியில் மிற்செல் சான்ட்னெர் இல்லாது டிம் செளதி, வில்லியம் ஓ ரூர்கே, மற் ஹென்றி அணியில் இடம்பெற்றனர்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, செளதி, ஓ ரூர்கே (4), ஹென்றியிடம் (5) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களையே தமது முதலாவது இனிங்ஸில் பெற்று, சொந்த மண்ணில் இனிங்ஸொன்றில் பெற்ற குறைவான ஓட்ட எண்ணிக்கையாக இதைப் பதிவு செய்து கொண்டது. துடுப்பாட்டத்தில் றிஷப் பண்ட் 20, யஷஷ்வி ஜைஸ்வால் 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களைப் பெற்றதோடு, ஐந்து பேர் ஓட்டமெதனையும் பெறவில்லை.





ஆர்ஜென்டினா

மாடியிலிருந்து விழுந்து

# ‘பொப்’ பாடகர் மரணம்

பிரபல பொப் பாடகர் லியாம் பெய்ன் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

*'One Direction'* என்ற இசைக் குழு உலக அளவில் பிரபலமாக இருதுள்ளது. இந்த குழுவில் பொப் பாடகராக இருந்தவர் லியாம் பெய்ன். பின்னர் குழுவில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஒன் டைரக்ஷன் குழு பிரிந்த நிலையில் லியாம் பெய்ன் அதிலிருந்து விலகினார்.

அர்ஜெண்டினாவில் பலெர்மோவில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் வசித்து வந்த லியாம் பெய்ன், திடீரென மூன்றாவது மாடியிலிருந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே பலியானார்.

அவர் விழுந்து இறந்த சம்பவம் எதிர்பாராத விபத்தா? அல்லது தற்கொலை முடிவா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா


# டொனால்ட் ட்ரம்பை ஆதரிக்கும் மஸ்க்

அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப்பை, உலகப் செல்வந்தர்களில் ஒருவரான எலான் மஸ்க் தீவிரமாக ஆதரித்து வருகிறார்.

தேர்தல் முடிவை நிர்ணயிக்கும் வலுவான போட்டியைக் கொண்ட மாநிலங்களில், வாக்காளர்களைக் கவர்வதற்காக வேட்பாளர்கள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், டொனால்ட் ட்ரம்பின் பிரசாரக் குழுவுக்கு எலான் மஸ்க் 70 மில்லியன் டொலர் நன்கொடை வழங்கியுள்ளார். இதன்மூலம் குடியரசு கட்சியின் பெரிய நன்கொடையாளராக எலான் மஸ்க் ஆகியுள்ளார்.

பென்சில்வேனியாவில் இந்த மாதம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் எலான் மஸ்க் ட்ரம்புடன் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஜனவரியில் ஒஸிம்ஹென்னை ஆர்சனல் கைச்சாத்திடாது

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான நாப்போலியின் முன்களவீரரான விக்டர் ஒஸிம்ஹென்னைக் கைச்சாத்திடுவதற்குத் தேவையான 68 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை ஆர்சனல் அடுத்தாண்டு ஜனவரியில் செலுத்தாதெனக் கூறப்படுகிறது.

நீண்ட காலமான 25 வயதான ஒஸிம்ஹென்னைக் கைச்சாத்திட ஆர்சனல் விரும்பியிருந்தபோதும் நடப்புப் பருவகாலம் முழுவதும் முதற்தெரிவு முன்களவீரராக கை ஹவேர்ட்ஸை தக்க வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கடனடிப்படையில் துருக்கியக் கழகமான கலடசரேயில் ஒஸிம்ஹென் விளையாடிவருகின்றபோதும் மூன்றாவது கழகமொன்றில் அவரை இணைய அனுமதிக்கும் சரத்தொன்று அவரது கடன் ஒப்பந்தத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# பார்சிலோனா செல்லும் நுனேஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான எர்லிங் ஹலான்டை அடுத்தாண்டு கைச்சாத்திட முடியா விட்டால் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான டர்வின் நுனேஸை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா கைச்சாத்திட முடியுமெனக் கூறப்படுகிறது.

ஏழுமலையானை தரிக்க

# இணையத்தில் டிக்கெட் வெளியீடு

திருப்பதி ஏழுமலையானை 2025 ஜனவரி மாதம் தரிசிக்க ஆர்ஜித சேவை டிக்கெட்டுகள் ஒதுக்கீடு, 19ஆம் திகதி காலை 10 மணியளவில் திருமலை-திருப்பதி தேவஸ்தான இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளன.

இந்தச் சேவை டிக்கெட்டுகளை எலக்ட்ரானிக் டிப் செய்வதற்கான ஒன்லைன் பதிவு 21ஆம் திகதி காலை 10 மணி வரை செய்யலாம். இந்த டிக்கெட்டுகளை பெறுபவர்கள் 21ஆம் திகதியில் இருந்து 23ஆம் திகதி வரை மதியம் 12 மணிக்குள் பணம் செலுத்தினால் லக்கி டிப்பில் டிக்கெட்டுகள் ஒதுக்கப்படும்.

22ஆம் திகதி காலை 10 மணியளவில் ஆர்ஜித சேவை டிக்கெட்டுகளான கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம் மற்றும் சஹஸ்ர தீபலங்கார சேவை டிக்கெட்டுகள் வெளியிடப்படும்.

உற்சவ சேவைகளுக்கான ஒதுக்கீடு, அவற்றின் தரிசன ஸ்லாட்டுகள் 22ஆம் திகதி மாலை 3 மணியளவில் ஒன்லைனில் வெளியிடப்படும்.

அங்கப்பிரதட்சண டோக்கன்கள் ஒதுக்கீடு 23ஆம் திகதி காலை 10 மணியளவில் ஒன்லைனில் வெளியிடப்படும்.

ஸ்ரீவாணி அறக்கட்டளைக்கு காணிக்கை வழங்கிய பக்தர்களுக்கான தரிசன டிக்கெட் ஒன்லைன் ஒதுக்கீடு 23ஆம் திகதி காலை 11 மணியளவில் வெளியிடப்படும்.

முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தீராத நோய் வாய்ப்பட்டவர்கள் ஏழுமலையானை தரிசிக்க ஏதுவாக இலவச சிறப்பு தரிசன டோக்கன்கள் 23ஆம் திகதி மாலை 3 மணியளவில் வெளியிடப்படுகின்றன.

சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகளின் (ரூ.300) ஒதுக்கீடு 24ஆம் திகதி காலை 10 மணியளவில் வெளியிடப்படுகின்றன.

திருமலை, திருப்பதியில் ஜனவரி மாதத்துக்கான அறைகள் ஒதுக்கீடு 24ஆம் திகதி மாலை 3 மணியளவில் ஒன்லைனில் வெளியிடப்படும். https://ttdevasthanams.ap.gov.in என்ற இணையதளம் மூலம் பக்தர்கள் ஆர்ஜித சேவை மற்றும் தரிசன டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம்.

மும்பை

விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்:

# 17 வயது சிறுவன் கைது

இந்தியாவில் கடந்த 3 நாள்களில், 12 விமானங்களுக்கு போலியான வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சிறுவன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சத்தீஸ்கரை சேர்ந்த நிர்பன் ஃபஸ்லுதீன் (வயது 33) என்பவரும் 17 வயதான சிறுவன் ஒருவருமே, இவ்வாறு கைது செய்யப்படுள்ளதாக, மும்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறுவன், கைது செய்யப்பட்ட ஃபஸ்லுதீனின் எக்ஸ் கணக்கை ஹேக் செய்து, அதன் ஊடாகவே சமூக வலைத்தளங்களில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாகவும் மும்பை விமான கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறித்த சிறுவன், நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுவர் சீர்த்திருத்த சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஃபஸ்லுதீனிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை

# கரப்பந்தாட்ட அணியினருக்கு இலவச சீருடைகள்

பி.கேதீஸ்

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை கரப்பந்தாட்ட அணியினருக்கு தலவாக்கலை சித்ரா கோல்ட் ஹவுஸ் உரிமையாளர் விஜேந்திரனின் நிதி அனுசரணையில் இலவசமாக சீருடைகள் செவ்வாய்க்கிழமை (15) வழங்கப்பட்டன.



பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 291 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த இங்கிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 291 ஓட்டங்களையே இங்கிலாந்து பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்து வென்றிருந்த நிலையில், முல்தானில் செவ்வாய்க்கிழமை (15) ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து பிறைடன் கார்ஸ், மத்தியூ பொட்ஸ், ஜேமி ஸ்மித்தை ஆரம்பத்திலேயே சஜிட் கான் (2), நோமன் லையிடம் இழந்தது.

பின்னர் இறுதியாக ஷொய்ப் பஷிர் கானிடம் வீழ்ந்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 291 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றது. களத்தில் ஜேக் லீச் 25 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆட்டமிழக்காது காணப்பட்டார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 18 ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.